Registered M—483.

தமிழகம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

வால்யூம் 2.] 1906௵ பிப்ரவரி௴ [நம்பர் 2.

விஷயங்கள்.

1.	சாஸ்திரப் பொருண் மாலை	பத்திராசிரியர்.
2.	ஆரியர்களின் ஸங்கீத முறை	P.S. ஸுந்தரமய்யர் B.A., L.T.
3.	நன்மையும் தீமையும் ...	பண்டிதர் S. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.
4.	வெளிப்பிரதேசங்களில் சஞ்சரிக்கும்தமிழர்கள் ...	உ. நா. அப்பாசாமி ஐயர்.
5.	அச்சுதராயாப்யுதயம்	T.S. குப்புஸ்வாமிசாஸ்திரிகள்
6.	நியாயமும் வைசேஷிகமும்	T. A. கோபிநாத ராவ் M. A.
7	சண்முகவிருத்திப் பரிசோதனைமறுப்பு ...	வித்வான் அரசஞ்சண்முகனார்.
8.	விசுவநாதம்	பண்டிதர், C. S. முத்துஸாமி ஐயர்.

பத்திராசிரியர்கள் :— T. இராஜமையங்கார், B. A., L. T. / C. S. முத்துஸாமி ஐயர்.

தஞ்சை:
கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

வருஷ சந்தா ரூ 1—8—0. } 1906. { தனிப்பிரதி அணா 2½ / பழையபிரதி அணா 3

சிங்கப்பூர், பினாங்கு முதலான விடங்களுக்கு—ரூ 2—8—0.

Copyright Registered.

தஞ்சைத் தமிழ்ச்சங்க வர்த்தமானம்.

ஸ்ரீமான் **R.** சுவாமிநாத விஜயதேவர் அவர்கள் சங்கத்தலைவர்.

* * * *

ஸ்ரீமான் **T. D.** சுவாமிநாத ஐயர் அவர்கள் உதவித்தலைவர்.

* * * *

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பெறும் ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷைகளில் மெற்றிகுலேஷன் பரீக்ஷைக்குச் சென்ற வருஷம் நமது கலாசாலையிலிருந்து விண்ணப்பஞ் செய்துகொண்ட மாணாக்கர் பதினொருவரில் அசௌகரியத்தால் பரீக்ஷாகாலத்தில் நின்றுவிட்ட ஒருவர் நீங்கலாக ஆஜரான பதின்மரில் அறுவர் இரண்டாவது வகுப்பிற் றேர்ந்து யோக்கிதாபத்திரம் பெறுந் தகுதிபெற்றனர். சென்றவருஷத்தில் முறையே தலைமை உபாத்தியாயராகவும், உதவியுபாத்தியாயராகவும், இருந்த பண்டிதர் **K. M.** நடேசய்யரவர்களும், பண்டிதர் **L.** உலகநாதபிள்ளையவர்களும் பரோபகாரமாக எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் கைம்மாறென்னுளது.

உடையார்கோவில், அப்பாசாமி ஐயர்,
உதவிக்காரியதரிசி.

புத்தகவரவு.

சென்ற மாதத்தில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள்:— சுதேசி: பு. 2, இ. 26-33; (2) சிங்கைஜனமித்திரன்: பு. 3, இ. 24-26; (3) நாகைநீலலோசனி; பு 17, இ 2-3; (4) கோயமுத்தூர்க்கலாநிதி: பு. 26, இ. 3-4; (5) மாதர்மனோரஞ்சினி: பு. 7, இ. 11; பு. 8, இ. 1; (6) விவேகசிந்தாமணி; வா. 14, இ. 10; (7) ஸ்ரீவீரமணிவிலாஸினி: வீ. 3, ந. 8; (8) விவேகபாநு: வா. 5, பு. 1.

(9) சித்திராங்கி சரிதம்: புதுவது புனைந்த இத்தமிழ்க்கதை ஸ்ரீமான் விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் இயற்றியது. இவரது கல்விப்பயிற்சியும் அத்வைத மதத்தேர்ச்சியும் மிகவும் வியக்கத்தக்கது. நரேந்திரபுரத்தரசன் நரேந்திரன் கந்தர்வகநத்தரசன் மகள் சித்திராங்கியை மோகித்துச் சில வஞ்சனை செய்கின்றனன். அச்சித்திராங்கியோ நரேந்திரன் மகன் பாஸ்கரனிடத்து பூர்வஜன்ம வாசனைகளினாற் றீராக் காதல் கொள்ளுகின்றனள். நரேந்திரன் 'மகனிற்கே மாலையிடுக' என்று கூறிச் சூழ்ச்சியால் சித்திராங்கியைக் கவர்ந்து தனது மாளிகையில் வைத்தனன். மகா பதிவிரதையான சித்திராங்கியின் மனமொவ்வுமோ? சித்திராங்கி சாசாங்கியென்றும் வாசந்திகையென்றும் மாறுவேடங்கள் பூண்டு இளவரசனுடன் உறவாடி வாழ்ந்தனள். நரேந்திரன் சூழ்ச்சியும் பயனற்றுப் போகச் சித்திராங்கியும் கர்ப்பவதியாகி இந்திரகுமாரன் என்றோர் மகனையும் பெற்றெடுத்தாள். நரேந்திரன் மிகுந்த கோபமடைந்து பாஸ்கரனைக் கொன்றுவிடும்படி கொலையாளரை யேவ,

சுபமஸ்[illegible]

தமிழ[illegible]ம்.

வால்யூம் 2. | 1906-௵ பிப்[illegible]ரி௴ | நம்பர் 2.

சாஸ்திரப் பொ[illegible]ண்மாலை.

3. இலைகளின் கண்கள். *

கிராஸ் (Graz) யுனிவர்ஸிடியில் தாவரசாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரான டாக்டர், ஜீ. ஹாபர்லாண்டு (Dr. G. Haberlandt) என்பவர் ஓர் அதிசயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இலைகளும் புஷ்பங்களும் சூரியன் இருக்கும் திசையைநோக்கித் திரும்புகின்றனவென்றும், நெருஞ்சிப்பூ சூரியகாந்தி முதலான புஷ்பங்கள் காலையில் இளஞ்சூரியனுடைய கதிர்களை நேர்ந்து கீட்டிசைநோக்குகின்றனவென்றும், மாலையில் அஸ்தம்படுகின்ற சூரியனுடைய கதிர்களை நேர்ந்து மேற்றிசை நோக்குகின்றனவென்றும், நாம் பலர் கூறக்கேட்டிருக்கின்றோமல்லவா? ஆயினும், இவைகள் என் இப்படிச் சூரியனிருக்கும் திசையையே நோக்கி நிற்கின்றனவென்று அறியாமலிருந்தோம். டாக்டர் ஜீ. ஹாபர்லாண்டு இப்போது நமக்கு ஒரு காரணம் காட்டி

---

* காசிநகர் இந்து காலேஜ் பத்திரிகை வால்யூம்-5, பக்கம்-294.

விளக்குகிறார். செடிகொடிகளின் இலைகளில் கண்களுள்ளன வென்று இவர் நிரூபிக்கிறார். வெகுநாள் பொறுமையுடன் ஆராய்ச்சிசெய்து இத்தாவரசாஸ்திரி இலைகளின் மேற்புறத்தில் (முக்கியமாய் ஓரங்களில்) கண்களைப்போன்ற சில அணுச்சமுதாயங்கள் உள்ளனவென்றும், இக்கண்களால் அவைகள் வெளிச்சத்தை உணர்கின்றனவென்றும் கண்டறிந்தார்.

அதாவது, நாம் நமது கண்களினமைப்பைச் சற்று நோக்குவாம். நமது கண் கோளம்போன்றது. முன்னர் கருவிழி இருக்கின்றது. கருவிழிக்குச்சற்றுப் பின்னர் நடுவே ஓர் துவாரத்தோடு கூடின தசைத்திரையிருக்கின்றது. இத்திரையின்மேல் எதிரே நிற்பவர் பிம்பம்படிதலால், இதனை 'கண்பாப்பா' என்றும் 'கிருஷ்ணன்' என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்தக் 'கண்பாப்பா' விற்கும் கருவிழிக்கும் மத்தியில் ஓர் அறையுண்டு. அவ்வறையில் ஓர்விதமான நீர் இருக்கின்றது. கண்பாப்பாவின் துவாரத்திற்குப்பின் அதனை ஒட்டிப் பின்புறங்கவிந்த ஓர் ஸ்படிகம் ஓர் மணியைப்போன்று விளங்குகின்றது. இதனையே மனிதர் 'கண்மணி' என்கின்றார்போலும். 'கண்பாப்பா' விற்கும் 'கண்மணி'க்கும் பின்னர் கோளத்தின் உள்ளிடம் மற்றோர் அறைபோல் ஆகின்றது. ஆகவே கட்கோளம் நீர் நிறைந்த இரண்டு அறைகளோடு கூடினதாய், நடுவே 'கண்பாப்பா' என்ற ஒரு திரையையும் 'கண்மணி' என்ற ஒரு ஸ்படிகத்தையும் கொண்டதாய் இருக்கின்றது. ஸ்படிகத்திற்கு நேர் பின்னுள்ள கோளச்சுவர் மிகவும் வியப்பானது,

டம்—1. நமது கண்.

1. ஒளியறிநாடி
2. முன் கருவிழி
3. சிறிய அறை
4. பின்புறங்கவிந்த மணி
5. பெரிய அறை

உ. ஒளியறிநாடிச் சுவர்

குறிப்பு: கண்மணிக்குமுன்னர் அதனை ஒட்டியே துவாரத்தோடிருக்கும் தசைத்திரையே 'கண்பாப்பா.'

மூளைக்கு ஒளியுணர்வைக்கொண்டு செலுத்துகின்ற ஒளியறிநாடி இச்சுவரிடத்தே நுழைந்து ஒரு கொடியானது தனது கணக்கிறந்த சிறிய சரடுகளைப் பந்தர்மீது படரவிடுதல்போலத் தனது கிளைகளைச் சுவரினிடத்தே பரவ விடுகிறது. ஆதலின் இச்சுவருக்கு 'ஒளியறிநாடிச்சுவர்' என்று பெயர்தரலாம். இவ்விதமான உறுப்புக்களோடு கூடினது நம்முடைய கண். வெளியிருந்து வந்த வெளிச்சம் கண்ணின்மேல் படவும் அது "கண்பாப்பா" வின் துவாரத்தின் வழியும் ஸ்படிகத்தின் வழியும்சென்று "ஒளியறிநாடிச்சுவ" ரின்மேல் படுகிறது. அப்போது "ஒளியறிநாடி" [illegible] ஒருவிதமான ஸ்பூர்த்தியுண்டாகின்ற[illegible] இந்த ஸ்பூர்த்தி [illegible]ளையிற்றாக்கும்பொழுது நாம் வெளிச்[illegible]த உணர்கின்றோம். இதுவே நாம் எதையும் பார்க்கும் [illegible]

இதுநிற்க; டாக்டர், ஜீ. ஹாபர்[illegible]இலைகளுக்கும் கண்களுள்ளன என்கின்றார்! இலைகளின் [illegible]த்தோரங்களிலுள்ள மேலணுச்சமுதாயங்களிற் சில கண்[illegible]பால அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். சூரியனுடைய க[illegible] அவ்வணுச்சமுதாயங்களின்மேல் விழவும் அக்காந்தி அவ்[illegible]ச்சமுதாயங்களை யூடுருவிச்சென்று அவைகளின் பின்புறத்[illegible] படுகின்றது. அவ்வணுச்சமுதாயங்களின் பின்புறமே நட[illegible]து கட்கோளங்களின் ஒளியறிநாடிச் சுவருக்குச் சமானமாகும். நமது கட்கோளங்களின் ஒளியறிநாடிச்சுவரில் வெளிச்சம் விழுந்தமாத்திரத்தில் நாம் எவ்வாறு வெளிச்சத்தை உணர்கின்றோமோ அவ்விதமே இவ்விலைகளும் தமது மேற்புறத்து அணுச்சமுதாயங்களின் (கண்களின்) அடிப்புறத்தில் ஒளிபட்டவுடன் அவ்வொளியை யுணர்கின்றனவாம்! ஆச்சரியம்! சூரியனுடைய கிரணங்கள் உணர்ச்சியைப் பிறப்பிக்கும் தம்முடைய அணுச்சமுதாயங்களின்மேல் நேரே விழாமற்போனால், அப்போது இலைகள் தங்கள் கண்கள் மீது சூரியனுடைய காந்தி நேரே விழும்படி திசைமாறி நிற்கின்றனவாம்.

† 'பில்டோனியா' (Filtonia) என்றவொரு செடியின் இலைகளில் ஒரு விசேஷங்காணப்படுகிறது. அது என்னவெனில், எப்படிநமதுகண்களில் ஒளியைத்திரட்டித்தரவேண்டி ஒரு ஸ்படிகம்

---

† இந்த பில்டோனியா என்ற பெயருக்குச் சரியான தமிழ்மொழியில்லை. இந்தச்செடியும் மேலேகூறியிருக்கும் வேறுசில செடிகளும் நம்முடைய நாட்டில் இல்லை போலாம்.

ஏற்பட்டிருக்கிறதோ, அதுபோலவே இந்த இலையின் சிலவணுச் சமுதாயங்களாகியகண்களில் பின்புறங்கவிந்த ஸ்படிகம் அமைந்திருக்கிறது. இலையின்மேல் உயர்ந்து கண்கள் பஞ்சகோணம் போல் இருக்கின்றன. இந்தப் பஞ்சகோணக் கண்ணின் நட்ட நடுவில் மேற்படி ஸ்படிகம் பொருந்தியிருக்கிறது. இந்தஸ்படிகம் தன்மேற்படுகின்றகிரகணங்களைத் திரட்டி உள்ளேசெலுத்த இலை வெளிச்சத்தை உணர்கின்றது. “இம்பேஷென்ஸ் மேரியான்னே” (Impatiens Mariannae) என்ற மற்றோர் செடியின் இலைகளிலேயும் இவ்வண்[ண]மே கண்களுள்ளன. நிழலை விரும்புகின்ற “காம்பநூலா” [illegible]la) என்ற மற்றோர்சாதிச் செ[illegible] இலைகளிலும் இ[illegible]ன கண்கள் காணப்படுகின்றன.

டாக்டர் ஹா[illegible]மேலும் பலவிதமான சோதனைகள் செய்துபார்த்தார். [illegible] கண்கள் ஜலத்தில் அமிழ்ந்துபோனால் அப்போது அ[illegible] இலைக்கு வெளிச்சத்தை அறிவிக்கிறதில்லையாம். ஆயினும[illegible]விதமான செடியின் இலைக்கு மாத்திரம் ஜலத்திலும் ஒளி[illegible]விக்கும் கண்களுள்ளனவாம். அதற்கு “ட்ரேபோலம்” [illegible] பெயர். இச்செடியின் இலைகளின் விசேஷம் என்னவென்[illegible] அவைகள் மெழுகுமயமானவைகள். ஆதலின் ஜலத்தில் நனை[illegible]தில்லை. ஊறிப்போகாமல் எப்போதும் வெள்ளித்தகடுபோன்ற ஒரு காற்றுப்போர்வையை மேலே மூட்டமாய்ப்போட்டுக்கொண்டுவிடுகின்றன. ஆதலால் எதாப்பிரகாரமாய் அக்கண்கள் தம்மீது விழும் வெளிச்சத்தை உணர்கின்றன. சாராயப் பிரயோகத்தால் இந்த இலைகளின்மேல் மெழுக்குத்தளத்தைப் போக்கிவிட்டால், கண்கள் குருடாகின்றன. ஒளிமேலே பட்டாலும் அதை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி அசைகிறதில்லை. ஆதலால் இவ்விதம் இந்த இலையின்மேல் மெழுக்குத்தளம் பொருந்தியிருத்தல் இரண்டு காரியங்களுக்கு ஏதுவாகின்றது. ஜலத்தால் இலைகள் நனைதலுமில்லை. ஒளியறியுஞ் சக்தியும் மங்குதலில்லை.

இவ்விதமாய் இலைகளினிடத்தில் பொருந்தியிருக்கிற கண்களை மனிதர்களின் கண்களுக்குச் சமானமாகச் சொல்லி விட்டோம். ஆனால் அவைகளுக்கு அவ்வளவு கௌரவம் கொடுக்கக்கூடாது. சிலவிதமான சின்னஞ்சிற்புழுக்கள் தம்மை மூடிக் கொண்டிருக்கும் ஓட்டிற்கு வெளியே தமது தசைமயமான அவ

யவங்களை நீட்டும். அத்தசையின் ஓரங்களிலும் கண்களுள்ளன. மேலே சொன்ன இலைகளின் கண்களை இக்கிளிஞ்சிற் கண்களுக்கே சமானமாகச் சொல்லலாம் என்று டாக்டர் ஹாபர்லாண்டு கூறுகிறார். இலைகளின் கண்களுஞ்சரி, சிப்பியின் கண்களுஞ்சரி, இவைகள் வெளிச்சத்தை மாத்திரம் பார்த்துத்திரும்பலாம். இவ்விலைகளின் பார்வை நமது கண்களின் பார்வைபோலாகாது. பார்க்கப்பட்ட பொருள்களின் உருவத்தை அவைகள் ஒருநாளும் அறியமாட்டா.

இலைகளும் தமது கண்களால் வெளிச்சத்தை நோக்கியசைகின்றன. கிளிஞ்சில் முதலான புழுக்களும் தமது கண்களால் வெளிச்சத்தை நோக்கியியங்குகின்றன. ஆயினும் இந்த விஷயத்தில் இவ்விரண்டினத்திற்கும் ஒரு வித்தியாசமுண்டு. கிளிஞ்சிலுக்கு உணர்ச்சியைப் பிறப்பிக்கும் நாடிகள் உண்டு. இலைக்கு நாடிகள் இல்லை. கிளிஞ்சில் தனது நாடியில் ஓர் ஸ்பூர்த்தியுண்டானதும் தனது தசைநார்களை நீட்டியும் முடக்கியும் இயங்குகின்றது. இலையில் நாடிகள் இல்லையாதலால், கண்களில் விழுந்த வெளிச்சம் அந்த இலையின் அணுச்சமுதாயங்களுக்கே மூலாதாரமான கருவணுவைத்தாக்க, அக்கருவணு தனதயலுள்ள அணுக்களை ஸ்பூர்த்திக்க, அப்போது இலையின் ஒருபாகம் அதைப்புக்காண, மற்றோர்பாகம் இளக்கங்காண, இலையும் நிலைமாறி அசைகின்றது.

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

ஆரியர்களின் ஸங்கீதமுறை.

(16-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும், இப்படி ஸ்வரத்தொகுதிகள் வருவதிற்கூட சிலதடவைகளில் இரண்டிரண்டு ஸ்வரங்களின் தொகுதிகளும் சிலவேளைகளில் மூன்று மூன்று ஸவரங்களாய்ச் சேர்ந்தும் வருகின்றன. உதாரணமாய், கேதாரகௌளம் என்னும் ராகம் பாடுங்காலத்தில் பா தப மக ரீரீ ரிக, மக ரிம கரி ஸா நிதப மப நீ ஸா ரிமா மக கரி ஸரி தப நீஸா. மேலே எழுதப்பட்ட விஷயத்தில் நாம் நிதப என்

கிற ஒரு தொகுதிதான் மூன்று ஸ்வரம் உள்ளது என்று காணலாம். மற்றவை எல்லாம் இரண்டு ஸ்வரங்களானவைகளேயாம். கவனித்துப்பார்த்தால் ஒவ்வொரு ராகத்திலும் வருகிற ஸ்வரச்சேர்க்கைகளில் மிகுதியாய் வருவது இரண்டு ஸ்வரங்களானவைகளே என்று அறியலாம். (இப்படி இரண்டு ஸ்வரங்களாய்ச் சேர்ந்து வருவதற்குக் காரணம் உண்டென்று நன்றாய்த் தானங்களைப்பற்றி எழுதும் போது விவரித்துச் சொல்லப்படும்.)

பெரும்பாலும் நம்மவர்களில் பாடகர்களும் சரி, கற்பவர்களும் சரி, எல்லாரும் ராகம் என்பது வேறு, கீர்த்தனம் வேறு, என்பதாக அபிப்பிராயம் உள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று மேலே சொன்னேனல்லவா? அது ஒரு பெரிய தப்பெண்ணம். ராகம் என்பது ஒரு கீர்த்தனத்தில் அந்தர்பூதமாய் உள்ளது. சரியான ராகஞானம் ஏற்படவேண்டும் என்றால் அந்தராகத்தில் அமைந்துள்ள முதல்தரமான தியாகய்யர் அவர்களது கீர்த்தனங்களை அல்லது க்ஷேத்திரஜ்ஞருடைய பதங்களை அவைகளை முதல் முதல் கற்றுக்கொண்டு அதிலிருந்து அந்தந்த ராகபாவத்தினது முக்கியமான ஸ்வரச்சேர்க்கைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தக்காலத்தில் நன்றாய்ப் பாடகர்கள் ராகம் பாடாததிற்குக் காரணம் இப்படி மேலே சொன்னமாதிரியான நன்றாய் ராகபாவத்தை வெளியிடக்கூடிய தியாகய்யர் அவர்களுடைய கீர்த்தனங்களையும் க்ஷேத்திரஜ்ஞருடைய பதங்களையும் நன்றாய்க்கற்றுக்கொண்டு அவைகளை நன்றாய் ஆராய்ந்து அந்தந்த ராகங்களின் முக்கியமான ஸ்வரத்தொகுதிகளையும் கற்றுக்கொள்ளாமல்; எதாவது ஒரு பாடகர் பாடுங்காலத்தில் அவசரம் அவசரமாய்க் கேட்டறியும் ஞானத்தைக்கொண்டும், எதாவது ஸம்பிரதாய புஸ்தகங்களில் சொல்லியிருக்கும் ஆரோஹண அவரோஹணக் கிரமங்களிலிருந்து ஸரளிவரிசைகளையும் ஜண்டை வரிசைகளையும் சண்டைபோடுவதுபோல் உரக்க உச்சரிப்பதனாலும் தான். ஆகவே கீர்த்தனம் வேறு, ராகம் வேறு என்று நினைக்க இடம் இல்லை. ஆனால் இப்படி ராகம் வேறு, கீர்த்தனம் வேறு என்று நினைத்துவிட்டதற்குக் காரணம் உண்டு. அதாவது சில சில கீர்த்தனங்களில் அவை எந்தந்த ராகத்தில் அமைந்துள்ளனவோ அந்தந்த ராகங்கள் சரியாய் வெளிப்படாமலிருக்கின்றன. மேலும் கீர்த்தனம் வார்த்தை ரூபமாய் இருப்பதால் அந்தந்த வார்த்தைகளைக்கொண்டு அவைகள் உச்சரிக்கும் மாதிரியை ஞாபகத்தில்

வைத்துக்கொண்டு விடுகிறோம். அவ்விதமாய் ராகத்தை ஸ்வர ரூடமானதால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளமுடிகிறதில்லை.

மேலும் சொல்லிக்கொடுக்கும் குருவாகிய பாடகர்களும் அந்தமாதிரி தாங்கள் பயின்றிராததினால் அவர்களும் கீர்த்தநம் கற்பிக்கும்போது தமது மாணாக்கர்களின் ராக ஞாநத்தையும் விருத்திசெய்துகொள்ளும்படிக்குப் போதிக்கிறதில்லை. அதாவது, கீர்த்தநங்கள் சொல்லும்போது அதைச் சிறுபாகங்களாகப் பிரித்துக்காட்டி அதன் ஸ்வரங்களைப் பிடிக்கச்சொல்லிப் பழக்கிவிடவேண்டும். இவ்விதமாய்ப் பாடம் சொல்வதற்கு உபாத்தியாயராய் ஏற்படுபவர்க்கு நல்ல தெளிவான ஸ்வரஞாநம் இருக்கவேண்டும். அவர்கள் எந்தப் பாட்டுக்கும் தயங்காமல் ஸ்வரம் பிடிக்கத் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும். (ஆனால், இவ்வித சரியான தேர்ச்சியுள்ள உபாத்தியாயர்கள் அகப்படுவது அரிதாயிருக்கும்.) அப்படி இல்லாதுபோனாலும், கீர்த்தநங்கள் ஒரேவிதமாய்ப் பாடுகிற வழக்கம் நம்முடைய பாடகர்களிடத்தில் கிடையாது. சிலபேர்கள்தான் தெரிந்த வித்வான்களிடம் ராகப்பிழை ஸ்வரத்தப்புமுதலிய குறைகளில்லாமல் கீர்த்தநம் அப்பியசித்துப் பாடுகிறார்கள்; வேறு சிலபேர்கள் கீர்த்தநங்களுடைய அக்ஷரங்களைமட்டும் யாராவது விதியோடு பாடிக்கொண்டுபோகிறவர்களிடம் தெரிந்துகொண்டு அந்தக் கீர்த்தநங்களை இயற்றிய தியாகய்யர் முதலானவர்கள் ஏற்படுத்திய வர்ணமெட்டு, சங்கதிகள் முதலானவைகளை எல்லாம் மாற்றிவிட்டுத் தாங்களே அதற்கு வர்ணமெட்டு ஸங்கதிகளெல்லாம் போட்டுவிடுகிறார்கள். (உதாரணமாய், பாடகர்கள், "ராம, நீ ஸமாந மெவரு—" என்கிற கீர்த்தநத்தைக் கெடுத்திருக்கிறதையாரும் கேட்டிருக்கலாம்.)

ஆகையால் நமது பாடகர்களிற் சிலர் தியாகய்யர் முதலானவர்களது கீர்த்தநங்களை இனிமேலாவது மாறுதல் அடையாதவண்ணமாய் எழுதிக் காலப்பிரமாணத்துடன், ஸ்வரப்படுத்தி அச்சிட்டுவைத்து விடுவார்களானால் லோகோபகாரமாயும் ஸங்கீதத்துக்குக் கேடுவராமலுமிருக்கும்.

பின்னும், ராகம் என்பது பாடும்வழக்கத்திலிருந்தாலும், அதை இப்படித்தான் பாடவேண்டும் என்றால், இவ்விதமாகத்தான் ஸ்வரத்தொகுதிகள் வேறு வேறு ராகங்களில் அமைந்

துள்ளை என்னும் யாவரும் எளிதில் அறியுமாறு ஸ்வரமாக எழுதிக்காட்டும் புஸ்தகங்கள் நமது தேசத்தில் கிடையாது.

(இன்னும் வரும்.)

P. S. ஸுந்தரம் அய்யர், B. A, L. T.

நன்மையும் தீமையும்.

(1-ம் தொ[illegible] 272-ம் பக்கத்தொடர்ச்சி)

அவ்வித ஆசை[illegible]ளாம் இடமான அசுத்தமனதையும் அதன் விருத்திகளையும் விலக்குவது எளிதிலாகிறதில்லை. அது ஒரு பக்கம் கீழேபிடித்து இழுத்து அவனைத் திரும்பவும் மடிக்கப் பார்க்கிறது. அவனது சுத்தமனது உண்மையான ஸ்வரூபத்தை அவனுக்கு உணர்த்தப் பார்க்கிறது. இப்போது அந்தச் சச்சரவில் அவன்கொஞ்சம் புகுந்து ஒருவாறுகக்கிளம்பியிருக்கிறான். அவன் இப்போது நீதியிலும், நேர்மையிலும், உண்மையிலும் நிலைபெற்றிருத்தலால் தன்னைப்போலவே மற்றவர்களும் இருக்கவேண்டுமென்றுகருதுகிறான். தர்மத்திலும் ஒழுங்கிலும் மாறுபட்டவர்களைக் காணும்போதெல்லாம அவர்கள் தன்கொள்கைக்கு உடன்படாமையால் அவர்களுடன் சண்டைபோட்டுத் தன் மனதைப்புண்ணாக்கிக்கொள்ளுகிறான். தன்னைச்சுற்றிலுமிருப்பவர்களிடத்தில் அவனுக்கு மிகவும் அதிருப்தி உண்டாகிறது. அவனுக்கு யாரைப் பார்த்தாலும் ஒன்றுக்கும் உதவாதமனிதர்களென்றும் உருப்படியாக்க முடியாதவர்களென்றும் தோன்றுகிறது. இந்த எண்ணம் அடிக்கடி அவனை அவஸ்தைப்படுத்துகிறது. இவ்விதமான மனத்தொந்தரவுடன் இவன் சிலகாலமிருந்து அதன் மூலமாகச் சில உண்மைகளைத்தெரிந்துகொள்ளுகிறான். இப்போது அவன் தன் அறிவின் படித்தரத்தில் இன்னம் மேலே வந்துவிட்டானென்று சொல்வதற்குச் சந்தேகமுமுண்டோ?

6. இவ்வாறு முன்னமே பலவிதமாகத்தானே [illegible]வஸ்தைப் பட்ட பிறகு தன்னைப்போலவே எல்லாரும் நீதிமார்க்க[illegible]தில் நிற்க வேண்டுமெனத் தான் எதிர்பார்ப்பது சரியல்லவென்றும், அப்படி-

நல்வழியில் நடக்க அவர்களாலாகாதென்றும், அவரவர்கள் தத்தம் பக்குவத்திற்குத் தக்கபடிதான் நடந்துகொள்ளவேண்டுமென்றும், அதைமாற்றவும் தன்னால்முடியாதென்றும் இப்போதுதான் அவனுக்குத் தெரியவந்தது. இந்த நிலைமையில்தான் அவனுக்கு மனிதருடைய அறிவு வரவர விகஸித்து உயர்ந்த ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறதென்று எண்ணம் உதயமாகியிருக்கிறது. மோக்ஷஸாம்ராஜ்யம் என்ற உச்சிப்பிள்ளையார்கோவிலுக்குப்போக உத்தேசித்துச் சித்தவிகாஸமென்னும் ஓர் உயர்ந்த மலையிலுள்ள பல படிகளில் பலமனிதர் வந்துகொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே தான்மேலே செல்வதாக அவனுக்கு ஒரு தோற்றமுண்டாகிறது. அவர்களெல்லோரும் ஒரே மார்க்கத்தின் வழியாகவும் வருகிறதில்லை; ஒரே படித்தரத்திலிருப்பதுமில்லை. பின்னையோ அம்மலையிலுள்ள பலபல மார்க்கங்களில் பலபல படித்தரங்களில் அவர்கள் சிதறுண்டிருக்கிறார்கள். அவர்களிற் சிலர் அம்மலையின் அடிப்புறத்திலும் சிலர் உச்சிக்குச்சமீபத்திலும் மற்றுமுள்ளவர்கள் இடையிலுள்ள பலவிடங்களிலும் மெல்லெனவே மேல்நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். உச்சிப்புறத்தின் சமீபத்திலுள்ளவர்களுடைய திருஷ்டி கீழ்பக்கங்களிலிருப்பவர்களைவிட அதிக விசாலப்பட்டிருக்கவேண்டியது நியாயம் தானே. ஆகவே அவர்கள் உயர்ந்த ஸ்திதியில் இருப்பதால் மற்றவர்களைவிட அறிவில் மேம்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் அவன் மற்றவர்களது கொள்கைக்கு இடங்கொடுக்காமல் தானே உபத்திரவப்பட்டதினால் தெரிந்துகொண்ட விஷயங்களாம்.

இவ்வுலகத்தில் ஒவ்வொருவனும் தன் தன் சித்த பரிபாகத்திற்கும், படித்தரத்திற்கும் தக்கபடியே உலகத்துப்பொருள்களை உற்றுப்பார்க்கிறானென்றும், பொய், வஞ்சனை, சூதுவாதுகளெல்லாம் தான் கேவலமான ஒரு ஸ்திதியிலிருந்தபோது தனக்கு ஹிதமானவை என்று கொண்டாடி உயர்ந்த பதவிக்கு வந்தபின் தன்னாலுதறித் தள்ளப்பட்டவைகளென்றும் தெளிந்து தேறுகிறான். சித்தபரிபாகத்தில் அடிப்படை வலுவில்லாதவர்களுக்கு அவைகள் அவசியம்தானென்று உண்மையாகவே அவன் உள்ளத்திற் கொள்ளுகிறான். தான் எத்தனையோ ஜன்மங்களெடுத்தும் ஒரு விஷயம் கெட்டதென்று எல்லாருக்கும் படமாட்டாதென்றும் அறிவின் தாரதம்மியத்தை நோக்கிச் சிலருக்குக் கெட்டதும் நல்லதாகுமென்றும் இந்த ஜன்மத்தில்தான் அவனுக்கு

மனதிற் புலப்பட்டது. இப்போது அவன் எல்லாருடைய கொள்கைகளுக்கும் இணங்கி நிற்கிறானே யல்லாமல் முன்போல் ஒருவரிடத்திலும் குற்றம் சுமத்துகிறதில்லை. அவன் தனக்குக் கீழ்த்தரத்திலிருப்பவர்களைக்கண்டு பரிதாபங்கொண்டு தன்னாலியன்றமட்டும் அவர்களை அடுத்த படித்தரத்திற்கு உயர்த்த முயற்சி செய்கிறான். இப்படி மற்றவர்களுக்கு உதவிபுரிவதுடன் தன்னை மோக்ஷாநந்தத்திற்குத் தகுந்த அதிகாரியாகச் செய்துகொள்ள வேண்டுமென்ற உத்தேசத்தையும் கைவிடுகிறதில்லை. இவ்வாறு தான் மோக்ஷத்திற்காகவேயன்றி அஞ்ஞான இருளில் அகப்பட்டுத் தடுமாறுகிற ஆத்துமாக்களுக்காகவும் பாடுபடும்போது இவ்வாத்துமாக்களுக்கும் அன்பும், இரக்கமும் அளவுக்கு மிஞ்சவே தன்னிடத்திலுள்ள அஹங்கார மமகாரங்கள் அவனைவிட்டு அகலுகின்றன. ஆகவே அவனுக்குத்தன் ஹிதத்தைக் கோருவதைவிடப் பிறருக்கு ஹிதஞ்செய்வது முக்கியமென்றும் தோன்றுகிறது. இப்போது அவன் உத்தேசமும் ஒருவாறாக மாறி உயர்ந்துவிட்டது.

7. தன் முக்தியைப்பற்றி அவன் மனதில் அடர்ந்திருந்த உத்தேசமெல்லாம் வரவர அதைவிட்டுக் கழன்றுவிடுகிறது. அவன் தனது முக்தியை அதிகமாக லக்ஷியம் பண்ணாமல் உலகத்துக்கு உதவிபுரிவதிலேயே ஊக்கங்கொள்ளுகிறான். ஒரு அத்தியாத்தும வித்தியா குருவை அவன் தரிசிக்க நேரிட்டால் உலகத்தாருக்காகப் பாடுபடுவதற்கெனவே தன்னை அவரிடத்தில் அர்ப்பணம் செய்கிறான். அவனுக்கு இப்போது இருக்கும் ஆசையெல்லாம் உலகத்திற்கு உதவிபுரியக் கங்கணங் கட்டியிருக்கிற மஹாத்துமாக்களுக்குத் தக்ககருவியாகத் தன்னைச்செய்துகொள்ளவேண்டுமென்பதே தான். பிறப்பு மிறப்பு மற்றுச் சுகித்திருக்க வேண்டுமென்ற ஆசையை அவன் இப்போது முற்றிலும் அகற்றிவிடுகிறான். மஹாத்துமாக்களைப்போல அவனுக்கு ஜீவன் முக்தி வலுவில் கிடைக்கிற ஸமயமுமொன்றுண்டு. அச்சமயத்தில் அவன் அதைத் தன்னயத்துக்கென்று பாராமல் தான் முற்றும் உழன்று சென்ற மார்க்கத்தில் மற்றவர்களையும் நடத்துவது எளிதாக இருக்குமென்றே அந்த நிலைமையை அங்கீகரிக்கிறான். அவர்களுக்காகப் பாடுபடவேண்டுமென்ற ஆசை மேலிடவே தானிறந்தவுடனே திரும்பவும் அவர்களுதவிக்காகப் பிறக்கவேண்டுமென்று மனப்பூர்வமாக எண்ணுகிறான். இந்த உற்சாகத்தில்

சொர்க்கலோகத்துச் சுகத்தைமட்டுமா அவன் அலக்ஷியம் பண்ணுவது? முக்திக்குப் பிறகு கிடைக்கும் நிர்வாண சுகம்கூட அவனுக்கு லக்ஷியப் படுகிறதில்லை! சில ஜன்மங்களுக்கு முந்தி நிர்வாண சுகத்தை அடைவதற்குக் குறுக்கு வழியைத் தேடித்திரிந்து கொண்டிருந்த அந்த மனிதனே இப்போது தன் எண்ணத்துக்கு எட்டாத பரமானந்த நிலையையும் வேண்டாமென்று விட்டுநிற்பதை உற்று நோக்குவீர்களாக.

இவ்விதமாகத் தன் காலமெல்லாம் மனிதவர்க்கத்தின் உதவிக்காகவே அவன் உழைத்துத்திருகிறான், தன்னுடைய உதவி இவ்வுலகத்தில் எங்கே வேண்டியிருந்தபோதிலும் அங்கே செல்லுவதற்கு அவன் கொஞ்சமும் தயங்குகிறதில்லை. தன் குருநாதன் இந்த உலகத்தில் எந்த மூலைக்குப் போகச்சொன்னாலும் உற்சாகத்துடன் புறப்பட்டுப் போகிறான். பந்தத்திலுழன்றுகொண்டிருக்கிற மனுஷ்யவர்க்கத்தினிடத்தில் அவனுக்கு மனப்பற்று மேன்மேலும் அதிகப்படவே தான் இப்போது உழைத்துக் கொண்டிருக்கிற இந்த ஸ்தூல உலகத்தைத் தவிர இன்னம் இரண்டு சூக்ஷ்ம உலகங்களுண்டென்றும் அங்குள்ளவர்கள் இங்கிருப்பவர்களைவிட அதிகமாக அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருக்கிறார்களென்றும் இவ்வுலகத்தைக்காட்டிலும் அங்கே அதிகசௌகரியமாக அவர்களுக்கு உதவிபுரியக்கூடுமென்றும் அவன் தெரிந்து கொள்ளுகிறான். ஆகவே தன் குருநாதன் தன்னை இந்த மூவுலகில் எவ்விடத்திற்கு அனுப்பின போதிலும் அங்கேசென்று அங்குள்ள ஆத்துமாக்களுக்கு உதவிசெய்யத் தயாராகவே இருக்கிறான். அவற்றுள் ஒரு உலகத்திலாவது அவ்வுலகத்தில் ஒரு மனிதனிடத்திலாவது அவனுக்கு விசேஷப்பற்றுதல் உண்டாச்சுதென்று சொல்வதற்கு இடமிராது. ஏனெனில் அம்மூவுலகமும் அங்குள்ள ஜீவாத்துமாக்களும் ஒரே இலாகாவைச் சேர்ந்திருப்பதாக அவனுக்குச் செம்மையாகத் தெரியும். அதனால் தான் அவன் குருநாதனுத்தரவுக்கு எதிர்ப் பேச்சில்லாமல் எவருக்கும் உதவி செய்ய உடன்படுகிறான்.

இந்த நிலைமையிலிருக்கும்போது அவனுக்கு மனிதவர்க்கத்தின் அறிவு இவ்வளவுதூரம் பக்குவமடையக்கூடுமென்று தெளிவாகத்தெரியவருகிறது. அவனுக்குத் துஷ்க்ருத்தியங்களில் தோஷ திருஷ்டி உண்டாகிறதில்லை. அவைகளில்லாவிட்டால் ஒருவன் தன்னறிவில் முற்றிலும் பக்குவமடைவதெப்படி? கொஞ்

சக்காலத்திற்கு அந்தத்துஷ்கிருத்தியங்களெல்லாம் ஒருவனை மேலே செல்லவொட்டாமல் தடுக்குமென்றாலும் அவற்றிற்கு மாற்றாக அவனிடத்தில் ஒளிந்துகிடக்கும் நற்குணங்களை வெளிப்படுத்தப் பிரயத்னம் எடுத்துக்கொள்ளக் காரணமாகயிருக்கின்றன. மேலும் ஒருவிதமான நன்மையையும் உண்டாக்காமல் தீமையை விளைவிப்பது மட்டுமே முற்றிலும் கெட்டதென்று சொல்லத்தக்கதாகவே அவன் திருஷ்டிக்கு ஒன்றுமே கெட்டதாகப் படுகிறதில்லை.

இந்த மாதிரியாகத் தன்பிரயோஜனத்தைக் கருதாமலே ஈசுவரானுக்கிரஹம் பெற்ற மஹாத்மாக்களிட்ட வேலையைச்செய்து வருமொருவனுக்கு மேலான உலகங்கள் ஒன்றன்பின்னொன்றாக திறக்கப்படும்போது அவன் கிருஷி செய்யவேண்டிய இடங்களும் வர வர அதிகப்படுகின்றன.

அவன் தன்னறிவு விகஸிக்க விகஸிக்க ஏழு பூமிகைகளோடு இப்பூமண்டலமானது (பிரபஞ்சத்தைமுழுதும் நோக்க) ஒருசிறு அணுவைப்போலவே யாகுமென்றும் மற்ற உலகங்களில் வேலை செய்வதைவிட்டு நமது பூமியிலுள்ள ஆத்மாக்களுக்கே பாடுபடுவதும் தன்னையம்பாராட்டுவதாகவே முடியுமென்றும் உய்த்துணர்கிறான். இந்த எண்ணமுண்டானபிறகு தான்போய் உதவி செய்யக்கூடிய மற்ற எந்த உலகத்திற்கும்போகத் தயாராக இருக்கிறான். மேலானபடித்தரங்களுக்குத் தான் மேன்மேலும் செல்லவே உயர்ந்த ஜீவர்களுக்கும் உதவிசெய்வானாகிறான். இப்படிக் குருநாதனுக்கு ஊழியஞ்செய்துவந்தபடியால் கடைசியில் அக்குருநாதனுடைய படித்தரத்திலிருந்தே தன் கிருத்தியங்களைச் செய்வதற்கு அவன் லாயக்காகி அந்தக் குருநாதனை விட்டு உலகநாதனையும் உலகநாதனை விட்டுச் சூரியநாராயணமூர்த்தியையும் அச்சூரியநாராயணமூர்த்தியைவிட்டுப் பரமேசுவரனையும் அடைந்து எத்தனையோ கற்பகோடி காலங்களுக்குப்பின் ஆதிகாரணமாகிய ஆதிப்பரஞ்சுடரை அடைவானாகிறான்.

(இன்னும் வரும்.)

பண்டிதர், **S.** சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

வெளிப்பிரதேசங்களில் சஞ்சரிக்கும் தமிழர்கள்.

(மதராஸ் மெயில்பத்திரிகையினின்று மொழி பெயர்ப்பு.)

[ஓர் தமிழ் நிருபநேசர் வரைந்தது.]

தமிழனுக்குத் தெரியாத இடம் இந்தியாவில் இல்லையென்றும், பொருள்தேடுவதற்கு தூரதேசத்திற்குப்போகத் தயாராயிருப்பதில் இவனை ஸ்காட்லாண்டு நாட்டானுக்கு இணையாகச் சொல்லலாம் என்றும் பல கல்விமான்கள் எழுதியிருக்கிறார்கள். நேட்டால், தென்அமெரிக்கா முதலிய இடங்களில் தோட்டம் அல்லது பண்ணைகளில் கூலியாட்களாக உழைக்கிறார்கள்; டிரான்ஸ்வாலில் வியாபாரிகளாயிருக்கிறார்கள்; பர்மா, சிங்கப்பூர், ஹாங்காங் முதலிய இடங்களில் அதிர்ஷ்டம் மிக்க காசுக்கடைக்காரர்களாகவும், வர்த்தகர்களாகவும், துரைத்தன உத்தியோகஸ்தர்களாகவும் வேலை செய்துவருகின்றனர்; இவ்வாறு அவர்கள் எவ்விடங்களிற் போய் உழைத்தபோதிலும், அவர்களின் முயற்சியும், யோக்கியசுபாவமும், சுறுசுறுப்புள்ள வழக்கங்களும் அவர்களுக்கு நல்லபேருண்டாக்கிவிட்டன; இதனால் அவர்கள் மகிழ்ச்சியடைவதற்குத் தகுந்த நியாயம் இருக்கிறது. ஒளவையார் என்னும் தமிழ்க்கவி தனது ஜகப்பிரசித்தமான சூத்திரங்கள் ஒன்றில் (தமிழகத்தின் முப்புறங்களிலும் சூழ்ந்துள்ள) முக்கடல்களையும் தாண்டிச்சென்று பணம் சம்பாதிக்கும்படி "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்று தன் ஜனங்களுக்குப் புத்திசொல்லுகிறார். இந்தப் புத்திமதியை ஒவ்வொரு பள்ளிக்கூடத்துப் பையனும் தனது இளமைப்பருவத்திலேயே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கற்றுக்கொள்ளுகிறான். தமிழப்பிராமணன் தன் நாட்டைச் சேர்ந்த மற்ற இனத்தவரைப்போல் அவ்வளவு மனோதைரியத்துடன் தூரதேசத்துக்குப் பிரயாணம் போகும்வழக்கமுள்ளவனல்லவென்பது மெய்யே; இதற்குக்காரணம் இவர்கள் மதாசாரத்தால் கட்டுண்டிருப்பதுதான். ஆயினும் இவர்கள் பங்காளக் குடாக்கடலைக் கடந்துசென்று மற்றப்பிராமணர்களும் துணிந்து

கடல்யாத்திரை செய்வதற்கு வழிகாட்டுகிறார்கள். ஸிம்லா, கல்கட்டா, லக்னோ, பம்பாய் முதலிய இந்தியாவின் பலபாகங்களிலும் தமிழரைக் காணலாம்; அங்கங்கே நம்மவர்கள் அவரவர்கள் புத்தித்திறமைக்குத் தக்கபடி வெவ்வேறு துறைகளில் முயன்றுவருகிறார்கள். இப்படிப்பல தூரதேசங்களுக்குச் சென்று உழைத்துவந்தபோதிலும், காவிரி அல்லது தாமரபர்ணிக்கரையிலுள்ள தம் ஜன்மபூமிக்குத்தாம் மிகுந்த திரவியத்துடன் சென்று தம் முதுமைப்பருவத்தைச்சுகமாகக் கழிக்குங்காலம் எப்போ வரப்போகிறதென்று ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; தங்கள் ஊரை ஒருக்காலும் மறப்பதில்லை. அவர்கள் உழைப்பும் செட்டும் உள்ள வழக்கங்களை உடையவர்கள்; அவர்கள் எங்கேபோனபோதிலும் நல்ல பேரெடுக்காமற்போவது அபூர்வம். இவ்வாறு இவர்கள் பிரசித்திபெற்றது கொஞ்சகாலமாகத்தானா? அல்லது பூர்வீக காலம் முதற்கொண்டே பொருள் தேடுவதற்காகத்தூரதேசம்போய் வரும்வழக்கம்இருந்துகொண்டிருக்கிறதா? பூர்வகாலம் முதற்கொண்டே திரவியசம்பாதனத்திற்காகத் தூரப்பிரதேசங்களுக்குப் போய்வந்தார்கள் என்று சொல்வதற்குத் தகுந்த ஆதாரம் உண்டு. பிராம்மணர்கள் தமிழகத்திற்கு வந்து சேருவதற்கு முன்னேயே பர்மாதேசத்தைத் தமிழர்கள் ஜயித்தார்கள் என்று ஜனங்கள் கர்ணபரம்பரையாகச் சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. அதற்குப் பிந்தியகாலத்திற்கு வந்து ஆராய்ந்து பார்ப்போமாகில், வடக்கே விசாகப்பட்டணம், கோதாவரி முதலிய நாடுகளில் தாங்கள் திராவிடப்பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற சில ஜனங்கள் இருக்கிறார்கள். பேரூரார் என்றும் திமிளிகள் என்றும் இவர்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. இவர்கள் செந்தமிழ் நிலத்திலிருந்து வடசர்க்கார் நாடுகளுக்குக் குடியேறிச்சென்றதாகத் தோன்றுகிறது; இவ்வாறு அவர்கள் குடியேறியகாலம் மேற்கூறிய வடநாடுகளைச் சோழராஜாக்கள் ஆண்டுவந்தபோதோ, அல்லது பிந்தியகாலத்திலோ நிச்சயமாகத் தெரியவில்லை. விசாகபட்டணம், கெஞ்சம் இந்த நாடுகளில் சோடவரம் என்று பெயருள்ள மூன்று இடங்கள் உண்டு. சோளமண்டலம் ஒரு காலத்தில் வடக்கே மகாநதி வரையில் பரவியிருந்ததென்கிற அபிப்பிராயத்தை இது உறுதிப்படுத்துகிறது. இந்தத்திராவிடர்களுடைய பாஷையும் வழக்கங்களும் தெலுங்கர்களுடையனவாக

இருந்தபோதிலும், அவர்கள் தமிழர்கள் தான் என்று பகுத்து அறிந்துகொள்ளக்கூடிய சிலவிநோதமான அறிகுறியான அடையாளங்கள் அவர்களிடத்தில் உண்டு. இத்தகைய பலவித சாட்சியங்களை வைத்துக்கொண்டு ஊகித்துப்பார்க்குங்கால், இவர்கள் தமிழ்நாட்டினின்று வடுகர் நாட்டிற்குக் குடியேறிச் சென்றவர்கள்தான் என்று நிச்சயமாக ருஜுவாகின்றது. மேனரிகம் அல்லது சகோதரன் பிள்ளை சகோதரியின் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும் வழக்கம் அவர்களுக்குள் இல்லை. தென் இந்தியாவில் இந்த வழக்கத்தை அனுசரிக்காதவர்கள் தமிழர்கள் மாத்திரந்தான். இந்த திராவிடர் வீட்டுப்பெண்பிள்ளைகள் தங்கள் புடவையின் மேல் முடிவுகளை வலதுதோள் வழியாக இழுத்து மேலாக்குப்போட்டுக் கொள்ளுகிறார்கள். இது தெலுங்கர்கள் வழக்கமல்ல. இவர்களுக்கு திராவிடர் என்கிற பெயர் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது? தமிழர்கள் என்கிற பெயர் ஏன் இவர்களுக்கு ஏற்படவில்லை? தன் நாட்டிற்கு அப்பால் தமிழன் போய்ச் சஞ்சரிக்கும்போது அவ்வெளிநாட்டார் இவனுக்கு அரவா, திகளா, திராவிடா முதலிய வேறு பேர்களைக்கொடுக்கிறார்கள். அரவா என்கிறபேரும், திகளா என்கிறபேரும் மரியாதையுடன் கொடுக்கப்பட்டவைகள் அல்ல; மூன்றாவது பெயராகிய திராவிடா என்பது ஆட்சேபத்துக்கு இடமுள்ளது அல்ல; அவன் எந்ததேசத்திலிருந்து வந்தானோ அந்த நாட்டை மாத்திரம் காட்டுகிறது. அரவா என்பது அரைவாயால் பேசப்படும் பாஷையையுடையவன் என்று அர்த்தம் கொடுக்கிறது. தமிழின் நெடுங்கணக்கில் சில சப்தங்களைக் குறிக்கக்கூடிய தக்க எழுத்துக்கள் இல்லாதகாரணத்தினாலோ, அல்லது தமிழ்வார்த்தைகளின் முடிவுகள் பெரும்பாலும் மெய்யெழுத்துக்களாக இருக்கிறகாரணத்தினாலோ இந்தப்பெயர் இவர்களுக்கு வந்திருக்கலாம். தமிழர்கள் அதிகமாக யாத்திரை செய்வதில் பிரியமுள்ளவர்களாக இருக்கிற காரணத்தைக்கொண்டு அவர்களுக்கு "திரிகேதா" என்கிற பெயர்கொடுபட்டு அது மறுபடி திகளன் என்று மருவி வந்திருக்கலாம்.

மைசூரின் வடபாகத்தில் சாங்கேதிகள் என்று பெயருள்ள ஒருவிதப் பிராம்மணர்கள் இருக்கிறார்கள். சம்ஸ்கிருதத்தைப் போல் சப்திக்கிற ஒருவிதத் தமிழ் பாஷையை இவர்கள் பேசுகிறார்கள். இவ்வினத்தவர்களின் ஆசாரியன் இவர்களை ஒருகாலத்

தில் மிகவும் கொடுமையாக நடத்தினதாகவும் அக்காரணத்தினால் அச்சமயாசாரியனுடைய கொடுங்கோன்மையினின்றும் விடுபடும் பொருட்டுக் கலகஞ்செய்து விலகி வெளிக்கிளம்பினதாகவும் கர்ண பரம்பரையாகக் கதைவழங்குகிறது. தங்கள் இனத்தைச்சேர்ந்த தென்னாட்டவரைப்போலவே, அவர்களுடைய உழைப்பிற்கும் கல்விக்கும் பேர்போனவர்களாக இருக்கிறார்கள். இவர்களைப்பற்றி ஓர் ஆச்சரியம் உண்டு. பிராம்மணர்களுக்குள், ஏர்பிடித்து உழுவதற்கு ஆட்சேபிக்காதவர்கள் இவர்கள் மாத்திரந்தான். இந்தக்காரணத்தாலேயே இவர்களுடைய ஆசாரியருக்கு இவர்கள்மேல் கோபம் வந்திருக்கலாம். அழகிய பழமையான வழக்கத்தின்படி இருக்குவேதத்திலிருந்தோ சாமவேதத்திலிருந்தோ காம்பீரியமான தொனியை உடைய சில மந்திரங்களைப்பாடிக்கொண்டு [illegible] வயல்நெடுக எளிய அந்தணன் உழவுமாடுகளை ஓட்டிக்[illegible]டுபோவதைப் பார்ப்பது மிகவும் விந்தையாக இருக்கிறது!

தமிழர்களுக்குள் [illegible]மக்கு மிகவும் சிரத்தையை உண்டுபண்ணக்கூடிய ஜனங்கள் மதுரைஜில்லா நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே. அவர்கள் மிக்க தூரதேசங்களுக்கெல்லாம் பிரயாணம் செய்கின்றார்கள். சீயம் நாட்டிலும் சீனதேசத்திலும் கடைகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். லேவாதேவி செய்வதில் நல்ல லாபம்பெற்று விருத்தியடைகிறார்கள். காரியங்களை ஒழுங்குபடுத்தி நடத்துவதிலும், பல பேர்வழிகள் ஒன்று சேர்ந்து தொழில் செய்வதிலும் வியாபார உபாயங்களிலும் ஐரோப்பிய வியாபாரிகளைப்போலவே இவர்களும் சாமர்த்தியமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குள் ஆங்கிலக்கல்விப்பயிற்சி பெற்றவர்கள் கொஞ்சம்பேர்தான். ஆங்கிலபாடசாலைகளில் இப்போது செய்விக்கப்படும் கல்விப்பயிற்சி உபயோகமில்லாமையினும் கேடானது என்று நினைக்கிறார்கள். இக்காலத்து முறையை அனுசரித்த கல்வி மிக்க தீமையை விளைவிக்கின்றதென்றே நினைக்கிறார்கள். எட்டுப்படிப்பாகமட்டும் இருந்து விடுகிறபடியாலும் அநுபோகத்துக்கு ஒத்துவராதிருப்பதினாலும் வியாபாரத்தொழில் உள்ளவர்க்கு இக்காலத்துப் படிப்புஏற்றதல்லவென்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்விக்கும் பயிற்சி மிகச்சாதாரணமுள்ளதாக இருந்தபோதிலும் மிகவும் கண்டிப்பானதாய் இருக்கிறது. அவர்களில் மிக்கசெல்

வர்களாக இருப்பவர்கள் வீட்டுப் பிள்ளைகள்கூட வேறொரு வியாபாரி கடையில் வித்தியார்த்தியாய் இருந்து வெகுகாலம் உதவியாக வேலைபார்க்கவேண்டியதுதான். இவ்விதப்பயிற்சியினால் தங்கள் தொழிலில் அவர்கள் திறமையுள்ளவர்களாகிறார்கள். அவர்கள் எதைச்செய்யப்புகுந்தபோதிலும், அதை ஒழுங்காகச்செய்துமுடிக்கிறார்கள். வியாபாரிகளாக இருப்பவர்களில் இந்தியாமுழுவதிலும் சஞ்சரிக்கிற வேறொருவிதத் தமிழர்களுண்டு. இவர்கள் லெப்பைகள் அல்லது லெப்பைமார்கள்தான். அவர்கள் மகமதிய சமயத்தவர்கள்; அவர்களுக்கு இந்துஸ்தானி பாஷையே தெரியாது; தங்கள் கொரான் என்கிற வேதபுஸ்தகத்தைக்கூடத் தமிழில் எழுதிவாசிக்கிறார்கள். அந்நியதேசங்களுக்குப் போய்த்திரும்பிய பிறகு தங்கள் அல்லா தங்களுக்குக் கொடுத்தருளிய ஐசுவரியத்தை வைத்துக்கொண்டு தங்கள் ஜன்மபூமியில் சுகமாகக் காலந்தள்ளுகிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சுதேசகிருஸ்தவராகிய தமிழர்கள் விஷயத்தைக் கவனிப்போம். புத்திசாலித்தனத்திலும் கல்விப்பயிற்சியிலும் முதற்றரமான ஜனங்களுடன் இவர்களைச் சேர்க்கலாம். தமிழர்களுக்குள் கல்விபரவச்செய்யும் உத்தம கைங்கரியத்தில் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிக ஊக்கத்துடன் உழைக்கிறார்கள். வெகு தூரத்திலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் இவர்கள் வக்கீல்களாகவும் துரைத்தன உத்தியோகஸ்தர்களாகவும், பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களாகவும் உழைத்துக் கீர்த்திபெறுகிறார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள வேளாண்மைக்காரர்களிலெல்லாம் தமிழக்கிருஷிகனே எல்லாரையும்விட உழைப்பாளி. விடியற்காலம் முதல் அஸ்தமனம் வரையில் நெற்றிவேர்வை நிலத்தில் விழும்படி பாடுபட்டு உழைக்கிறான். சேலம் கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் ஆறாவது குளமாவது இல்லாத இடங்களில் 26 அல்லது 30 அடி ஆழமுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீரை ஏத்தம் போட்டு இறைத்து நெல், கரும்பு முதலிய பயிர்களை வளர்க்கிறான். தமிழன் இவ்வாறு தான் தொட்டகாரியங்களிலெல்லாம் ஜயம்பெறுவதற்குக் காரணம் யாதெனில் அவன் வழக்கங்களெல்லாம் உழைப்புக்கு அனுகூலமானவை; தான் செய்யும் எந்த முயற்சியிலும் நல்லபேறெடுக்கவேண்டுமென்கிற விருப்பம் அவனுக்கு உண்டு. புத்திசாலித்தனத்திலும் இராஜ்ய

நிர்வாகத்திறமையிலும் மேன்மை பெற்ற தன் இனத்தவர்களில் அண்டை அயல் நாடாகிய மைசூரில் இரண்டுபேர்கள் திவான் மார்களாக வேலைபார்த்தனரென்றும், திருவாங்கூர் இராஜ்யத்தில் திவான்களாக மேன்மைபெற்ற தமிழர் மூவரெனவும், பரோடாவில் மந்திரி வேலைபார்த்து மாட்சிமை பெற்றவரில் தம் இனத்தவரில் ஒருவர் உளர் எனவும் எடுத்துக்காட்டிக் களிப்புறுகிறான்.

உ. நா. அப்பாசாமி ஐயர்.

அச்சுதராயாப்பியுதயம்.

அநுபந்தம்.

(1-ம் தொகுதி 296-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதுவரையில், எனக்குக் கிடைத்த நான்கு பழைய ஏட்டுப் பிரதிகளிற் கண்டபடி, அச்சுதராயாப்பியுதயத்திலுள்ள விஷயங்களை எவரும் அறிய எடுத்துக் கூறினேன். இந்நூலின் நூலாசிரியர் அவ்வரசாது காலத்திலிருந்தவர். அவ்வரசருடைய வேண்டுகோளுக்கிணங்க பாகவதசம்பு என்ற மற்றொரு நூலையுமியற்றியவர். அதுபற்றி இந்நூலாசிரியருக்கு அக்காலத்திய இராஜாங்க விஷயங்கள் நன்றாகத் தெரிந்திருக்க இடமுண்டு. ஆயினும் இவர், அவ்வரசர் பட்டத்துக்கு வந்து சில வருஷங்களுக்குள் நிகழ்ந்த சங்கதிகளைமாத்திரங்கண்டு, அக்காலத்திலேயே தம் நூலை எழுதி முடித்துவிட்டனர் போலும். அச்சுதராயர் ஈழமண்டலத்தின்மேல் படையெடுத்துச் சென்றதாக இவரது நூலில் எவ்விடத்தும் கூறப்படவில்லை. பிற்காலத்தில், தஞ்சாவூர் இராஜகோபாலஸ்வாமி கோயிலில் சகாப்தம் 1461-ல் வரைந்துள்ள சாஸனத்தால் மேற்படி விஷயம் வெளியாகின்றது. இனி, இதுகாறும் சிலாசாஸனங்கள் முதலிய பிராசீனலேகனங்களால் வெளிக்கு வந்திருக்கும் சரித்திரஸம்பந்தமான விஷயங்களை இங்கெடுத்தெழுவது தகுதியாகக் காணப்படலாம். அவைகளால் இன்னுஞ் சிற்சில நூதனமான விஷயங்களைத் தெரிந்துகொண்டாலும் தெரிந்துகொள்ளலாம். 1900-வது வருஷத்து எபிகிராபிகல் ரிபோர்ட்டில் மகா-ா-ா-ஸ்ரீ வேங்கய்யர் அவர்கள் “விஜயநகரத்தரசர்கள்” என்ற தலைப்பின் கீழாகச் சிலாசாஸன

வாதாரங்களைக்கொண்டு பதினாறு பிரகரணங்கள் வரைந்துள்ளார். அடியிற் கண்டவை அவைகளினின்றும் தொகுத்தெழுதப்பட்டவை.

விஜயநகரத்தரசர்கள்.

69. விஜயநகரத்து இரண்டாவது இராஜவம்சத்தரசர்களெல்லோரிலும் பராக்கிரமும் பிரக்கியாதியும் மிகுந்து விளங்கினவர் கிருஷ்ணராயர். அவருடைய சாஸனங்கள் அநேகம் உள்ளன கண்டறியப்பட்டிருக்கின்றன. அவைகளினின்றும் அவரது இராஜ்யத்தின் விஸ்தீர்ணம் நன்கு புலப்படுகின்றது. அவர் வெற்றிகொண்டு வெளிப்புறங்களில் சவாரிபோன காலங்களில், தென்னிந்தியாவிலுள்ள காஞ்சீபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய முக்கியமான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து அங்குள்ள கோயில்களுக்கு ஏராளமான நன்கொடையளித்தனர். மண்டபங்கள், கோபுரங்கள், பிராகாரச்சுவர்கள் முதலியவைகளைக்கட்டியும் மற்றும் பலவிதமான கட்டிடங்களை அமைத்தும் அவர் செய்த திருப்பணிகள், தென்னிந்தியாவிலுள்ள அவரது சாஸனங்களையெல்லாம் எடுத்தெழுதி முடிந்தாலொழிய, இம்மட்டெனக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. உதாரணமாக, திருவண்ணாமலையில் அருணாசலேசுவரஸ்வாமி கோயிலின் ஆயிரக்கால் மண்டபமும், பதினொரு நிலைகளையுடைய பெருங்கோபுரமும், நூற்றுக்கால் மண்டபமும், சிதம்பரம் கோயிலின் வடக்கு கோபுரமும் அவராலே கட்டப்பட்டவைகள். மேற்படி வடக்குகோபுரம், அவ்வரசர் ஸிம்மாசலத்தில் வெற்றிஸ்தம்பம் நாட்டித் திரும்பிவந்தபிறகு அவரால் கட்டிமுடிக்கப்பெற்றதென்று, சிதம்பரம் கோயிலிலுள்ள சாஸனமொன்றில் வரையப்பட்டிருக்கின்றது. ஸிம்மாசலம் என்பது விசாகப்பட்டணம் ஜில்லாவில் உள்ளது. உண்மையில் கிருஷ்ணராயருடைய இராஜ்யம் ஸிம்மாசலம் வரையில் எட்டியிருந்ததென்பது, அவ்விடத்து இலட்சுமீநரஸிம்மஸ்வாமி கோயிலில் வரைந்திருக்கும் மூன்று சாஸனங்களால் நன்கு வெளியாகிறது. அச்சாஸனங்களிலிரண்டு சகாப்தம் 1438-ல் (=கி. பி. 1515-16) வரையப்பட்டவை. அவ்விரு சாஸனங்களின் காலத்திற்கு முந்தியே உதயகிரியும் கொண்டவீடும், கொண்டபல்லியும், இராஜமகேந்திரபுரமும் அவரது

இரண்டாவது இராஜ வம்சத்தி கிருஷ்ணராயரும் அவர் பிடித்துக் கொண்ட இடங்களும்.

ஆளுகைக்குள்ளாய்விட்டன வென்று மேற்படி இருசாஸனங் களினின்றும் தெரியவருகிறது. மேலும், அவ்வரசர் ஸிம்மாசலத் திற்குப் போயினரென்பதும், அப்பொழுது சின்னதேவம்மா, திருமலம்மா என்ற அவரது இரண்டு இராணிகள் அவ்விடத் தில் அக்கோயிலுக்கு அநேக ஆபரணங்கள் அளித்தன ரென்ப தும் அவ்விரு சாஸனங்களிலும் கண்டிருக்கும் விஷயங்கள். சகாப்தம் 1441-ல் (=கி. பி. 1518-19) வரையப்பட்ட மற்றொன் றாகிய மூன்றாவது சாஸனத்தில், கிருஷ்ணராயர் தமக்குப் பிரதா பருத்திரகஜபதி மகாராயர் விட்ட பற்பல கிராமங்களையெல்லாம் ஷை இலட்சுமீநரஸிம்மஸ்வாமி கோயிலுக்கு கோயில்மானியங்க ளாக விட்டு விட்டனரென்று கண்டிருக்கின்றது. சகாப்தம் 1436-ல் (=கி. பி. 1513—14) வட ஆற்காடு ஜில்லாவில் திருப்பதி யில் வரைந்திருக்கும் மூன்று சாஸனங்களில், கிருஷ்ணராயர் பிர தாபருத்திரகஜபதியை யெதிர்த்து கோண்டவீடு வரையில் அவ ளைப் பின்றொடர்ந்து துரத்தி உதயகிரியைப் பிடித்துக்கொண்ட தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சாஸனங்களுடன் மேலே கூறிய ஸிம்மாசலம் சாஸனங்களிரண்டையும் வைத்து உய்த் துணர்ந்து பார்க்குமளவில் கிருஷ்ணராயர் சகாப்தம் 1436-ல் (=கி. பி. 1513-14) அல்லது அதற்கு முந்தியே பிரதாபருத்திரகஜ பதியை முறியடித்து உதயகிரியைக் கைப்பற்றிக்கொண்டு அம் மட்டோடு நில்லாமல் முற்சென்று, சகாப்தம் 1438 (=கி. பி. 1515-16) க்குள்ளாக ஸிம்மாசலத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் ஜயஸ்தம்பம் நாட்டியிருக்கவேண்டுமென்று வெளியாகின்றது. இப்படையெடுப்பில் தோல்வியடைந்த பிரதாபருத்திரகஜபதி கிருஷ்ணராயரைத் தமக்கு மேற்பட்ட அரசராக ஏற்றுக் கொண்டு, அவர்கீழ் தாம் சிற்றரசராயிருந்தனர் போலும். இந் நிலைமையில் அவர் சில கிராமங்களைக் கிருஷ்ணராயருக்கு விட, கிருஷ்ணராயர் அவற்றைக் கைக்கொண்டு, சகாப்தம் 1441-ல் (=கி. பி. 1518-19-ல்) ஸிம்மாசலம் கோயிலுக்கு இறைஞ்செய் திருக்கவேண்டுமெனத் தெளிவுற விளங்குகின்றது.

70. கிருஷ்ணராயருக்குப்பிறகு அவருடைய பின்னோனாகத் தம்பியாகிய அச்சுதராயர் பட்டமடைந்தனர். அவர் கிருஷ்ணரா யரைப்போல இரணசூரரெனப் பெயர்வாய்ந்து வாழ்ந்தனரெ னத் தெள்ளத்தெளிய அறியக்கூடவில்லை. ஆனதுபற்றி, தஞ்சா

லூர் இராஜகோபாலஸ்வாமிகோயிலில் சகாப்தம் 1461-ல் (=கி. பி. 1538-39-ல்) வரையப்பட்டுள்ளவொரு சாஸனத்தில் "ஏழமும் கம்பளமும் கொண்டருளிய ராஜாதி ராஜன் * * * ஸ்ரீ வீரப்பிரதாப அச்சுததேவ மகாராயர்" என்று வரைந்துகிடப்பதைக் கண்டபொழுது, அது வீண்தற்புகழ்ச்சியென்றே நினைக்கலாயிற்று. ஏனெனில் பிற்காலத்திய விஜயநகரத்தரசர்களுள் அவ்வாறெல்லாம் வீணுகத் தம்மை ஏற்றிச் சொல்லிக்கொள்ளும் வழக்கமேற்பட்டிருந்தது. அச்சுதராயருடைய அரசாட்சிகாலத்தில் அவரது சாஸனங்களிரண்டு காஞ்சீபுரத்தில் வரையப்பட்டுள்ளன. அச்சாஸனங்களிரண்டிலும், அவர் தாம்பிரபரணி நதியில் வெற்றிஸ்தம்பம் நாட்டினரென்றும் பாண்டியநாட்டரசன் கோதையை வெட்டினரென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அச்சாஸனங்களிற் கண்டவிஷயங்கள் உண்மையேயாமாகில், அவர் இலங்கையைக் கொண்டனரென்று தஞ்சாவூர்ச் சாஸனத்திற் சொல்லியிருப்பதை முற்றும்பொய்யென்று நினைக்கவொண்ணாது. மேற்கூறிய காஞ்சீபுரத்திருசாஸனங்களிலொன்று சகாப்தம் 1454-ல் (=கி. பி. 1531-32-ல்) அருளாளப்பெருமாள்கோயிலிலும், மற்றொன்று சகாப்தம் 1456-ல் (=கி. பி. 1533-34-ல்) காமாக்ஷியம்மன் கோவிலிலும் வரையப்பட்டுள்ளன. அச்சாஸனங்களிலுள்ள விஷயங்கள் ஒன்றுக்கொன்றுமிகவும் ஒற்றுமையுள்ளவைகளாயிருத்தலின், அச்சாஸனங்களைநம்பாமலிருக்க இடமில்லை. அச்சாஸனங்களிலிருந்து வெளியாகும் முதலாவது முக்கியமானவிஷயம், அச்சுதராயர் பட்டமடைந்தகாலம் சகாப்தம் 1452-இன் (=கி. பி 1529-30) மேற்செல்லாநின்ற விரோதிவருஷம், கார்த்திகைமாதம் அபரபட்சத்துப்பஞ்சமிதிதியென்று குறிப்பிட்டெழுதியிருப்பதே. ஆதலின், அவருக்குமுன் அரசாண்ட கிருஷ்ணராயர் ஏறக்குறைய அதுவரையிற்றான் அரசாண்டிருக்கவேண்டுமென்றேற்படுகிறது. அச்சுதராயர் சகாப்தம் 1452-ல் (=கி. பி. 1529-30-ல்) பட்டமடைந்தனரெனினும் அவர் சகாப்தம் 1449-லேயே (=கி. பி. 1526-27) கிருஷ்ணராயருக்குத் துணைவராகவிருந்து அரசாண்டுவந்தனரென்பதாகப் பிரமாணமூலமாகத் தெரிகிறது.

அச்சுதராயர்.

அவர் பட்டமடைந்த காலம்.

71. அச்சுதராயருடைய அரசாட்சிகாலத்தில் நிகழ்ந்த சரித்திரவரலாறுகளில் முதன்மையானது, அவரிடத்தில் சரண்புகுந்த

சில ஸாமந்த அதிபதிகளை அவர் பாதுகாத்துக் காப்பாற்றினரென்பதே.

அவர்கீழ்ப்பட்ட ஸாமந்த அதிபதிகள்.

அவ்வாறடைக்கலம் புகுந்தவர்கள் நுக்கிஹல்லி, ராயணராஜர், உம்மத்தூர் மல்லராஜர், வெங்கடாத்திரி இவர்களும் மற்றோர்களுமேயாம். இவர்களில் முதலாவார் பிரசித்திபெற்றனரல்லர். நுக்கிஹல்லி என்பது அவரது உறைவிடமாயிருக்கலாம். அப்பெயர்வாய்ந்த ஒரு கிராமம் தற்காலத்தில் ஹாஸன் டிஸ்ட்ரிக்ட்டில் சின்னராயபட்டணம் தாலூகாவில் இருக்கின்றது. இதுவே அதுவாயினும் ஆகலாம். ரைஸ்துரை அவர்களுடைய "எபிகிராபியா கர்ணடிகா" என்னும் புத்தகம் 27-வது பக்கத்தில் உம்மத்தூர் அதிபதிகளைப்பற்றிய சுருங்கியவரலாறு எழுதப்பட்டிருக்கிறது. "நீலகிரி டிஸ்ட்ரிக்ட்டு மானுல்" புத்தகம் 268-வது பக்கத்தில் அடியில்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—"உம்மத்தூர் அதிபதிகள் சந்தேகமற நெடுங்காலம் நீலகிரியைத்தங்களதிகாரத்தின்கீழாக்கிக்கொண்டு துயரடைந்த காலங்களில் இவ்விடத்தைத் தமக்கு உறைவிடமாகவைத்துக் கொண்டிருந்தனர். சிறிதுகாலம்வரையில், அவர்கள் கல்ஹத்திக்குப் பக்கத்திலுள்ள மேலுக்கோட்டையில் சிற்சில ஸ்வதந்திரங்களை வகித்திருந்தனர்போலும். * * * மேலுக்கோட்டைக்குச் சுற்றுப்பக்கங்களில் வேடர்கள் இந்நாளிலும் வாசமாயிருக்கிறார்கள். அவர்களின் முன்னோர்கள் உம்மத்தூர் அரசர்களின் கீழ் வேலையிலமர்ந்து வரிவசூலித்துவந்தனர். அதுபற்றி, அங்குள்ள வடுகர்கள் வேடர்களை நாளைக்கும் மனதாற வெறுக்கின்றனர் என்பதாக மேட்ஸ்துரை அவர்கள் கூறுகின்றனர்." மேலும், ஈரோட்டில் வரையப்பட்டுள்ள வீரசிக்கராயருடையசாஸனம் உம்மத்தூர் இராஜவம்சத்தார்களைப்பற்றியதாகவே யிருக்கவேண்டுமெனக் காணப்படுகிறது. ஆயினும், காஞ்சீபுரத்துச்சாஸனங்களிற் பிரஸ்தாபிக்கப்பட்ட மல்லராஜர் பெயர் இதுகாறும் ரைஸ்துரை அவர்களின் ஆராய்ச்சியால் வெளிக்குவந்துள்ள அவ்வம்சத்தரசர்களின் பெயர்களில் வந்திருக்கக்காணப்படவில்லை. "எபிகிராபியா கர்ணடிகா" புத்தகம் 27-வது பக்கத்தில் அவ்வம்சத்தார்களின் பரம்பரையைக்காட்டும் அட்டவணையொன்று பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றது. அவ்வட்டவணையின்படி அச்சுதராயர் காலத்திலிருந்த உம்மத்தூராதிபதி நஞ்சராஜ உடையார் என்பவர். அவர் கி. பி. 1512-1540 வரையில் அரசாண்டனர். ஒருவேளை

அச்சுதராயரைச் சரணடைந்த மல்லராஜர் என்பவர் உம்மத்தூர் சிற்றரசுபாத்தியத்தைக்கையிழந்து, நஞ்சராஜ உடையாரால் ஸ்தானப்பிரஷ்டராயினர்போலும்.

72. அச்சுதராயருடைய போர்த்தொழில்கள் முதல் முதல் பாரதவருஷத்தின் அறத்தெற்கில் ஆரம்பித்தனபோலும். அவர் திருவடிராஜ்யத்தின்மீது படையெடுத்துச்செல்லும்படி தம் சைனியங்களை ஆயத்தஞ்செய்தனுப்பி, தாம்பிரபரணியில் ஜயஸ்தம்பம் நாட்டி; திருவடியரசனிடமிருந்து இறைவாங்கி, பாண்டிநாட்டரசன் மகளைக் கடிமணஞ்செய்து கைக்கொண்டு, தும்பிச்சிநாயகனையும் ஸாலுவநாயகனையும் கீழ்ப்படுத்திக்கொண்டனரென்று தெரியவருகிறது. திருவடிராஜ்யம் எனக் கூறியிருப்பது திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தையேதானெனத் தெளிவுற விளக்குகின்றது. ஏனெனில், திருவிதாங்கூர் அரசர்களுக்கு இந்நாளிலும் திருவடிகள் என்ற பட்டப்பெயருண்டு. பிற்காலத்திய விஜயநகர அரசர்களின் சாஸனங்கள் சிலவற்றில் திருவடிராஜ்யம் என்னும்பெயர் காணப்ப[illegible]றது. அது இன்ன ஸமஸ்தானமென்று கண்டறியப்ப[illegible] மயக்கமாகவேயிருந்தது. அது திருவிதாங்கூர் ஸமஸ்தான[illegible]மென்ன விப்பொழுது நன்றாகத்தெரியச்சொல்லக்கூடும். திருவிதாங்கூர் ராஜ்யம் பற்பல காலங்களில் விஸ்தீர்ணத்தில் ஏராளமாக மாறுபாடடைந்திருந்தது. இப்பொழுது நமது பிரஸ்தாபத்திலுள்ள மேலேகண்ட சங்கதிகள் நடந்தேறின காலத்தில் தற்காலத்திய திருநெல்வேலி ஜில்லாவின் ஒருபாகம் திருவிதாங்கூர் ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டிருந்தது.

திருவிதாங்கூர் அரசரை அச்சுதராயர் ஜயித்தனர்.

(இன்னும் வரும்.)

T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.

நியாயம் அல்லது தர்க்கமும், வைசேஷிகம் அல்லது பரமாணுவாதமும்.

(12-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்து தர்க்கத்தின் அநேக சாஸ்திரீய பதங்களுள்ளும் 'வியாப்தி', 'உபாதி' என்பன வெகு முக்கியமானவை. வியாப்தி

எனின் இன்றியமையா உடனிகழ்ச்சி. இதுதான் அரிஸ்டாட்டிலினுடைய அவயவத்தின் 'உதாஹரணத்தின் (அல்லது நிதர்சனத்தில்) அல்லது பொது உடன்பாட்டில், இருக்கும் சம்பந்தத்தைக்காட்டும் பதம். "எவ்வெவ்விடத்துப் புகையுண்டோ, அவ்வவ்விடத்து நெருப்புண்டு" என்னுமாப்போன்ற இன்றியமையா நிகழ்ச்சிதான் வியாப்தி என்பது. இதை (இவ்வியாப்தியைக்) குறித்து சங்கர மிச்சரர் சொல்லுவது யாதெனில், "இது வெறும் சம்யோகமுமன்று; தொகுதியைக்காட்டும் இயற்கையுமன்று. என்னெனில் பொது உடன்பாட்டின் . எழுவாயையும் பயனிலை முழுவதையும் சேர்க்கும் சம்பந்த பதம் தான் இன்றியமையா வுடனிகழ்ச்சியெனின், இவ்விதமான சம்பந்தம் புகைவிஷயத்தில் காணேம்! என்னெனில் நெருப்புள்ள விடத்திலெல்லாம் எப்பொழுதும் புகையிருப்பதில்லை. இன்றியமையா உடனிகழ்ச்சி என்பது அளவு அல்லது உபாதிவேண்டாச் சம்பந்தம் என்று கூறலாம். இது பயனிலை முழுவதுடனும் பரந்திருக்கும் சமவாயம். அன்றிக்கே, இன்றியமையாமல் தன்னுடன் கொண்டிருக்குந் தன்மை".

இதுநிற்க, விசேஷபதம் அல்லது அளவு என்பதுதான் உபாதி யென்னப்படும். புகையுண்டென்னுமிடத்து நெருப்பு [illegible] என்பது சித்தம்; ஆயினும் நெருப்புளது என்னுந் [illegible]ம் புகையுமுளது என்பதன்று. புகையும்நெருப்பும் கூடியிருக்கிறது என்னும் மேற்கோள் கூறுமிடத்து, ஒரு அடைமொழி அல்லது ஒரு அளவு அல்லது உபாதியைச் சேர்த்தே சொல்லவேண்டும். (நெருப்பும் புகையும் கூடியிருக்கின்றன என்பதற்கு) ஈரவிறகு எரிக்குமிடத்து புகையுங் கூடியிருக்கும் (என்னும் அடைமொழிகள் வேண்டியிருக்கின்றன.) இந்த தர்க்கத்துப் பரிபாஷையையும், ஆழ்ந்த புத்தியையும் சொல்லப்புகின் இடமடைக்கும் (என்று விடுத்தனம்.) தர்க்க சாஸ்திரம், படித்த இந்துக்களுக்கு, மிகுஅபிமதமான (சாஸ்திரம்) ஆதலால் இந்துக்களுடைய பலவேறு கிரந்தங்களை உற்று நோக்குமிடத்து, பழங்கிரேக்கராகிலும், இடையில் வந்த அராபியராகிலும், அன்றிக்கே ஐரோப்பிய தார்க்கிகர்களாகிலும், இந்துக்களைவிட அதிக யுக்தி புத்திகளைத் தர்க்கத்தில் செலுத்தவாவது, விவாதத்தைத் திட்டமாயும் சாஸ்திரீகமாயும் நடத்தவாவது செய்யவில்லை (என்பது பெறப்படும்).

சண்முகவிருத்திப் பரிசோதனை மறுப்பு.*

இன்று தமிழகத்தில் மதிக்கூர், நண்பர் சண்முகவிருத்திப் பரிசோதனையெனப் பெயரிட்டெழுதிய விஷயமொன்று படித்தேன். அதன்கண் மேற்கொண்ட விஷயமன்றிப் பல நிந்தையுங் காணப்பட்டன. அவர் பகை முதலாயகாரணமொன்றில்லாதே வசை கூறினர். காரணமுள்வழி எப்பெற்றியரோ அறியேன். பகைத்திறத்தும் பிறரைப்பழியாமையன்றோ பண்புடைமைக்கழகு? இங்ஙனம் அழுக்காற்றினால் அல்லவை செய்வார்க்கு விடைகூறாமையே யமையுமாயினும் கற்றறிவில்லார் சிலர் அவ்வுரையுமெய்யென மயங்குவாராதலின் அவர்பொருட்டு நண்பரென்மேற் சுமத்திய குற்றங்களைமாத்திரம் பரிகரித்து அவரெழுதிய வாசகப்பிழையினை எடுத்துக்காட்டலிற் பயனின்மையின் விடுத்துச் செந்தமிழறிவிற் சிறந்த பெரியார் நடுச்சொல்வாரென நம்பி இம்மறுப்பு எழுதுகின்றேன்.

இளம்பூரணர் முதலாய உரையாளர் செய்தபேருதவி மறந்துமாதாபிதாக்கள் மேரில் வீண்குற்றங்கூறிய பகல்வனைப்போல் வத்திரத்தின் குறையை முகுரத்திற்கேற்றியாங்குத் த குற்றமறியாது பிறர் குற்றங்கூறிய இந் நூன்முகத்திலெனவும், சி செய்த பேருதவிமறந்து சிலர் செய்த சிற்றுதவியை வியந்தேனென அங்கன்றி எத்துணைச்சிறப்பினதென்பது தானே விளங்குமென பொய்யாய சில காரணங்கூறி வெளிப்படையானுங் குறிப்பானு ழித்தார். மெய்யாய குற்றங்காணப்படினும் அதனைச் சுட்டிக்கூ கழாமை மேலோர்க்கியல்பன்றோ? இகழின் அரசியலும் வறுக் : அது குறித்தாயினும் நண்பரவர்கள் இனி யெழுதுவாராயின் வ ச்கிமேற்கொண்ட விஷயமே யெழுதிச் செல்லக்கடவர்.

இனி அவர் கூறும்வசை யுண்மையன்றென்பது காட்டுதும்.

பிறர்நூற் குற்றங்காட்டல் எழுவகை மதத்துள் ஒன்றாகலானும், மறுதலைக்கடாமாற்றமுரைத்தல் உரைக்கிலக்கணமென ஆசிரியர் தொல்காப்பியனார் விதித்தாராகலானும், தன்கோணீஇப் பிறன்கோண் மறுப்பது எதிர்நூலென்ப என்றாராகலானும், முதனூலொடு மாறுபட்ட நூலுரைகள் யாவர் செய்தனவாயினும் மறுத்தல் நூல்வழக்கேயாகி, உயர்ந்தோர் பலரு மொழுகியவாற்றான், கபிலபரணர் தம்முளொருவரை யொருவர் மறுத்தனர்; இளம்பூரணவடிக ளுரையுட் சிலசேனாவரையரும் அவ்விருவருரையுட் சில நச்சினார்க்கினியரு மறுத்தனர். குறளுரையெழுதிய பதின்மரும் சித்தியாருரையெழுதிய அறுவரும் பிறரும் இப்பெற்றியரே.

இக்காரணத்தால் அவர்கள் தமக்கு முன்னுள்ள உரையாசிரியர்கள் செய்தபேருதவி மறந்து இகழ்ந்தவராவரோ? ஆகாரே. அங்ஙனமாக என்மேல் நன்றிகொன்ற குற்றத்தை வாளாவுரைத்துப் பழித்தல் நியாயமாகுமோ? முகம்போலவே மக்கட்குக் கருத்தும் வேறுவேறாக விருத்தலின், யானுரையெழுதுங்கால் இலக்கணமுறைகொண்டு பிறர்

* நிருபநேயர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராசிரியர்கள் உத்தரவாதிக ளாகமாட்டார்கள்.

கோண் மறுத்தல் இன்றியமையாவியல்பிற்றாகவும், அதுபற்றி மாதா பிதாக்கள் பேரிற் குற்றங்கூறிய புதல்வனென்றும், வஸ்திரத்தின் குற்றத்தை முகூர்த்தத்திற்கேற்றினனென்றும் இகழல் சாலுமோ? ஊக்கமுள தேற் சிறுவருரையுங் கொள்கவென்பதனால் யாமெழுதியவற்றுள் ஏற்குங் கொள்வனவற்றைக்கொண்டு ஏனையதன்றின் அடிக்கும்: பழித்தலடாதல், இழித்துரையேயியல்பிற்கொண்ட நாவிற்கு எத்துணைச்சொல்லினு மென்? அவமதிப்புமான்ற மதிப்பு மிகைமக்களான் மதிக்கப்படுவனவே யாதலாலும் இதுகாறும் உயர்ந்தோருள் ஒருவராயினும் பிறன்சோண் மறுத்தலைக் குற்றமென்றுமையாலும் இவர் கூறினும் எனக்கெய்துவ தோரிழுக்குமில்லை. அனறியுங் கையறியா வேனையோர் இவர்போல மறைத்துப்பழியாது மாதுர்த்துரோகி பிதிர்த்துரோகி தன் முகக்கோணலறியாது கண்ணாடியைப் பழித்தகுரங்கென்றாற்போல வெளிப்படையாகப் பழிப்பினும், நல்லார் நீமல்ல சொல்லியக்கால் மற்றது தாசித்திருத்தல் தகுதியாதலான் அவையும் பொருளாகக்கொள்ளப்படுவனவல்ல.

நன்றிகூறலின்கட் சிலர்செய்த உதவியை யான் பெரிதாகப்பாராட்டியதங்குற்றமென்றார். அஃர்க்கது பெரிதன்றெனத்தோன்றினும் அந்நன்றி எத்துணைச்சிறப்பினதென் றிகழற்கு அவர் யாவர்? இகழ்ந்தால் அது தினைத்துணைநன்றி செயினும் பனைத்துணையாக்கொள்க என்னும் பொதுமறையை யிகழ்ந்ததா முடிதலைச்சற்றுக்கருதுக.

இனி அவர், தந்தமொன் றேர் கருங் குன்றையன் பார்த்துப்
புந்திவெண் பாற்கட லூட்டுதூஉஞ்
செந்தமி ழமிர்தா லிரண்டெழற் பொருட்டே

என்பதன்கட் சில குற்றங் கூறினர். அவற்றையுமாராய்வோம். இச்செயுளின் கருத்துத்தேவர் பலகோடுடைய பொன்மயமாய மந்தரகிரியை வாசுகியாற் பிணித்து வெண்மையாகிய பாற்கடலுள் நாட்டி வெண்மையாகிய அமிர்தத்தைப் பெற்றாற்போல யானும் ஒருகோடுடைய கருமை (பெருமை) பொருந்திய விநாயக னென்னுமலையை அன்பாகிய நாணாற் பிணித்து வெண்மையாகிய புத்தியென்னும் பாற்கடலினுட்டுவேன் செம்மையாகிய தமிழென்னும் அமுதமெழற்பொருட்டு. என்பதாகலின், இது சொல்லானும் பொருளானுமுரண்டொடை பெற்ற வுருவகமாம். முற்றுருவகமன்மையின் அன்பாகிய நாணென்னாது அன்பார்த்து எனக்கூறப்பட்டது. தந்தமொன்றென்னும் அடை விநாயகரைப் பிறயானைகளினின்றும் மலையினின்றும் விலக்கியுணர்த்தற் பொருட்டு வந்த விசேடணமாம். கருமையென்பது பொருளாற் பெருமையெனப் படினுஞ் சொல்லால் வெண்மைக்குஞ் செம்மைக்கு மினமாதல்பற்றி வெண்பால் செந்தமிழெனப் பிற்கூறுதற்கேற்பத்தொடைவிகற்பத்தாற் கருங்குன்றென முற்கூறப்பட்டது. இம்முறையை விடுத்து முதற்சொல்லாகிய தந்தத்தை மறவினைபுரியு முறுப்பெனக்கூறி மங்கலமாகுமாவென வினவுகின்றார். இறக்குதும். இதுகூடும் இதுகூடாதென்பதற்கு நூல்பிரமாணமாவதன்றித் தாமே கற்பித்துக் கூறுங்காரணங்கள் பிரமாணமாகாமையானும், நூலுள்

“சீரெழுத்துப் பொன்பூத் திருமணிநீர் திங்கள்சொற்
கார்பருதி யானை கடலுலகந்—தேர்மலைமா
கங்கை நிலம்பிறவுங் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாஞ் சொல்லின் வகை”

எனச்சிலவிதந்துகூறி அவையும் அவற்றின் பரியாயங்களும் பிறவுமங்கல
மாமென்றதேயன்றி இவ்விவ்வினையுடையன மங்கலமெனவும் இவ்விவ்
வினையுடையன மங்கலமாகாவெனவுங் கூறாமையானும், மறவினையுறுப்
பாதலிற் கூடாதென அவர் கூறுங்காரணம்போலியாதலறிக.

அன்றியுந் தந்தமொன்றேய் குன்றென்பதனால், அது விநாயகரது
முகத்தின்கண் ஒடிக்கப்படாது நின்று விளங்கும் ஏகதந்தத்தையன்
றே வுணர்த்திற்று. அதற்கு மறவினைதானெவ்வாறு கற்பித்தல் கூடும்?
ஒடித்த தந்தமென நினைந்து அவ்வாறுகூறினாரெனின், அதுவும் பாரத
மெழுதிற்றெனப்பலரும் கூறலின், அதுபற்றியும் வினைகற்பித்தல்
செல்லாதே. அற்றன்று; கயமுகனைவதைத்தமையாலெனின், அதுவுங்
கருணையென்பதன்றி மறவினையென யாவருங் கூறலின்றே. இங்ஙனங்
கடவுட்காயினும் அவர் கொண்ட வடிவத்தின் அவயவங்கட்காயினும்
மறவினைகற்பித்தாற் கடவுள் அறவாழியந்தணனென்பது பொய்படுமே. அற்
றன்று; விநாயகரது தந்தங்களைக் குறித்திலர் கரிக்காட்டியானைத்
தந்தங் குறித்தே அவ்வாறு கூறினாரெனின், ஒன்று என்பதனால்
அது விநாயகர்க்குரிய கொம்பென்பது வெளிப்படையாதலின் அது
வுஞ் செல்லாது. கனவிற் கனவுகொண்டு காட்டியானைத் தந்தமென
நினைந்தாரெனின், அத்தந்தத்தாலும் திக்கெட்டுங் காலூன்றல் முதலாய
பிறவுறுப்பாலு மறவினைபுரியும் யானையை மங்கலமெனக்கூறிய நூலா
ர்க்கு அதன்றந்தத்தைமாத்திர மறவினையுடைத்தெனக்கூறி மங்கலமன்
றெனல் எவ்வாற்றானுமியையாது.

இனித் தந்தத்தை அமங்கலமென்னாமல் தனித்துநின்று மங்கலமென்
றாயினுங் கூறிற்றோவெனின், சொன் முதலாக முற்காட்டிய மங்கலச்சொற்
கள் தனித்துவரினும் அடையொடுபுணரினும் மங்கலமேயாதலானும், அவ்
வடையு மங்கலமேயாதலானும், இது 'மூவாமுதலாவுலகமொருமூன்று'
மெனச் சிந்தாமணிக்கண் உலகு அடையொடுவந்தமையானும் பிறவாற்
றானு முணரப்படுமாகலானும், அடைகளுமங்கலமாதல் பெறப்படலின்
அவ்வாறே குன்றமென்னு மங்கலமொழி தந்தமொன்றேய் கருங்குன்
றென அடையொடு புணர்ந்து வந்ததென்றும், மங்கலமொழிக்கு அடை
யாக நிற்றலின் தந்தமு மங்கலமேயாகுமென்று முணர்க. ஈண்டுத்தந்த
மொன்றுடைமை முதற்கட் கூறப்பட்டாற்போன்றே பலருங் கொண்
டாடுஞ் சித்தியாரில் முதற்கண் 'ஒருகோட்டனிரு செவிய'னெனத்
தொடங்கிவாழ்த்தலுங் கண்டடங்குக.

இன்னுமவர் கண், முகம், பாதம், கர முதலாய உத்தமாங்கங்களைத்
தவிர்த்து அதமமாகிய கடின தந்தத்தைக் கூறல் குற்றமென்றார். அத்
தந்தம் அதமமென இவர் யாங்குணர்ந்தார்? அதமமாயின் ஏகதந்தமென்
னும் பெயர் விநாயகர்க்கேற்றதென்னை? 'ஏகதந்தத்த னிணையடி பணி
வா'மென்று இலக்கணக்கொத்தும், 'ஒருகோட்ட'னெனச் சித்தியும்,
'தனிக்கோட்டு வாரணத்தின்று' ளெனவெண்பாப்பாரதமும், 'இங்கனங்
குழவியென்னத் திகழொருமருப்பின்' எனச் சேதுபுராணமும், 'வச்சிர
மருப்பினொற்றை வேழ'மெனக் கந்தப்புராணமும், 'மின்னேருங்குமுகக்
கொம்பு விரவியகற்பக'மெனவும் 'கோட்டு நுனியாலெழுதியபண்ணவ'
னெனவும் பிறநூலும், இவர் கூறிய அதமத்தைக் கருதாமல் அத்தந்தத்
தைக் கூறலென்னை?

"உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கம்

திருமருளு பாங்க மெல்லாந் தானரு டனக்கொன்றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்கின னசித்தனன்றே”,

என்பவாகலிற் கடவுட்குச்சர்வமும் அருள்வடிவும் அருட்செயலுமேயாக ஏகதந்தத்தை அதமாங்கமெனவும் அதன்செயலை மறவினையெனவும் பழித்த இவரது நாவென்படும்? கையென்படும்? நினைந்தமனமென்படு மென்று யான் மிகக்கவல்கின்றேன்.

இனிக் கருங்குன்றெனற்குத் தாமாகக் கரியநிறத்தையுடைய குன்றெனப்பொருள் செய்துகொண்டு அது தாமதகுணமாதலிற் குற்றமென்றார். ‘கருங்கழல் வெண்குடைக் கார்நிகர்வண்கை’ என்புழிப்பெருமை பொருந்திய கழலென்பதே பொருளாமன்றிக்கரிய கழலெனப்படாமை யான் அதுபோலவே யீண்டும் பொருள் கொள்ளலே முறை.

இவர் கூறியவாறு நிறமேயுணர்த்துமாயினும் பாட்டியலார் நிறத்தவாகிய காரும் யானையும் கடலும் பிறவுமங்கலமெனக்கொண்டாராகலின், அதுபற்[illegible]ருங்குன்று அமங்கலமாதல் இல்லையே! அன்றியுமுதற்கணின்ற த[illegible]வெண்ணிறமாதலால் அது கொண்டு சாத்துவிகங்கற்பியாமற் பெ[illegible]ற பெருமையை மாத்திரம் நிறமாக்கித்தாமதத்தையிழுத்துப்போர்[illegible]தற்கு என்ன நிமித்தம் நேர்ந்ததோ அறியேன்.

இனிக் குணாகுணங்களையறிந்து பயன்றராத மலையையுங் கடலையுங்கூறல் குற்றமென்றும், அவை யிரக்கமற்றவர்க் குவமமாமென்றுங் கூறினார். அங்ஙனமாயின் திருமுருகாற்றுப்படையில் ‘அறிந்தோர்சொன்மலை’யெனவும், தேவாரத்துள் ‘குறைவிலா நிறைவே குணக்குன்றே’ எனவும், திருவிசைப்பாவுள் ‘தெளிவளர்பளிங்கின் றிரண்மணிக்குன்றே’ எனவும், ‘நீறணிபவளக்குன்றமே’ எனவும், ‘மற்றவரறியா மாணிக்கமலை’ எனவும், ‘கரையிலாக்கருணைமா கட’லெனவுங் கூறலென்னை? பேராசிரியர் முதலாயினார் மலையை யாசிரியர்க்குவமை கூறியதென்னை? கடவுளைக்கருணையங்கடலெனவும் அருட்கடலெனவும் பல்லோருங்கூறி வாழ்த்தலென்னை? நூலுள் யாண்டாயினும் குணாகுணமறிவனவற்றையே கூறல் வேண்டுமென விதி கூறியதுண்டோ? உருவவுவமைபற்றியுங் காதல் முதலானவை பற்றியும் நால்வகைச் சொல்லும் வழங்கற்குரியனவென்றே இலக்கண நூலார் இதுவரையெண்ணியிருந்தனர். இன்றன்றோ நண்பரவர்களாற் குணாகுணமறிந்து பயன்றராத மலை கடல் முதலாயவை கூறலாகாதென்பது வெளியாயிற்று? இஃதரிதினுமரிதே! இவ்வாறு நூற்பிரமாணந் தேடுங்கவலை சிறிதுமின்றி யெழுதத்தொடங்கினார்க்கு இதனால் அது குற்றம் அதனால் இது குற்றமெனப் பன்னாள் மனம் வருந்திப் போலிக்காரணந் தேடுதலுஞ் சிரமமேயாதலின் எல்லாங் குற்றமே. குற்றமாயிருத்தலால்; என்று ஒரேதுவேறிக் கணத்தில் விஷயத்தை முடித்தல் குணமே. அன்றியும் புந்தியைக் கடலென்றமையால் அதனை யிரக்கமற்றதெனக் கூறினுங் கடவுளை மலையெனல் கொண்டு இரக்கமற்ற பொருளெனக் கூறற்கெவ்வாறுடன்பட்டார்? இதற்குப் பிரமாணம் இடைக்காடன்பிணக்குத் தீர்த்த படலம் ஒன்பதாவது செய்யுளென்றார். அச்செய்யுளில் ‘கடலே கழியே விலங்கே புள்ளே மாநிலையே பொருப்பே சரமே’யென இவற்றோரஃறிணை யொத்திருந்தானெனப் பாண்டியன் முடிதளக்கானாகி யவமதித்தல் கண்டு அச்செயற்குவமைகூறியிருப்ப, அதன் கருத்தையோராது கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தாற் பெற்று நல்லாரிடைப்புக்கு அவை யிரக்கமற்றார்க்கன்றி யேனையோர்க்காகாவென்றார். அச்செய்யுள் கடலையும் மலையையும் இர

க்கமற்றவர்க்கன்றிக் கடவுட்கும் பிறர்க்கு[illegible] கூடாதென
விலக்கிற்றுண்டோ? கற்றறிந்தோரே சொ[illegible]ண்களை நோ
யுறுத்தல் நோக்கிவிடமெனவும் இன்புறுத்தல்[illegible]தமெனவுங்
கூறலும், புலிசிங்க முதலாய விலங்கினைக் கொலை[illegible] பற்றியிழி
ந்தோர்க்கும் வீரம்பற்றி யுயர்ந்தோர்க்குங் கூறலுங் கற்றோர்பாற்கேட்
டுத் தெளிக.

இனித் தந்தமொன்றேய் கருங்குன்று என்றதனால் கடவுள் மறவி
னையென்றும சாத்திவீக மற்றவரென்றும் கிருபையற்றவரென்றுங்
கவர்பொருள்படுமென்றார். அங்ஙனமாகாமை முற்காட்டிய நூற்பிர
மாணங்கொண்டு கைப்பிடிக்க.

இனி நூற்றொடக்கத்துள்ளது புத்திக்கிலகுவாயும் மலைவில்லாத
கியுமிருத்தல்வேண்டுமெனவும், கடினமான தந்தத்தையும் பிறவற்
றையுங் காட்டியிருப்பதால் மாணக்கர் புத்திமலைவுற்றுக்கலங்கித் தடு
மாறுமெனவும், இக்காரணங்களால் இச்செய்யுள் வாழ்த்திலக்கண
முடைத்தன்றெனவும் உரைத்தார். மாணக்கர் மலைவுக்குப் பொரு
ளுணர்ச்சித்தடையே காரணமாதலன்றி அப்பொருளதுகடினமும் லகு
வும் பிறவுமாகியபண்புகாரணமாதலெங்ஙனம்? ஈதென்னபுதுமை? இது
பால்கொக்குப்போலிருத்தலால் பால்குடித்த குழவி யிறந்தேவிடுமென்
பதனோடொக்குமன்றோ?

இனிப் புந்தியாகிய பாற்கடலில் விநாயகமலையைநாட்டித் தமிழ
முதத்தைபெடுப்போமென்றாரெனவும்; இவ்வுவமாந்தத்தில் முதற்றோன்
றியது விடமெனவும் பின்றோன்றிய அமுதமுதலாயின அயலாரடைந்
தனவெனவும், அவ்வாற்றான் இவ்வாழ்த்தின்பயன் அப்பிரயோசனமா
மெனவும் பிறவுங்கூறினார். உவமைக்கும் பொருளுக்குமொத்ததாகிய
பொதுத்தன்மைகொள்ளலேயன்றியொவ்வாத தோர்தன்மைகூறி உவ
மைக்குற்றங்காணுமாறு இவர்க்கு எந்நூல்கற்பித்ததோ? அதனைச்சற்றே
திறப்பாராக. அங்ஙனமன்றி மூடிவைத்துரைப்பது மூடரிடத்தன்றி
நூல்வல்லாரிடத்து விலையாகுமோ?

இனியவர் பிறவிப்பெருங்கடலுக்கு இறைவனடி தோணியாமென்ற
குறளினும் அதனை நீந்தற்கு மாத்திரங்கொள்ளாமல் தோணி ஒரொரு
காலத்துப்பார்தட்டியுடைந்து நீருள் அமிழ்த்தலின் அதுபோல இறை
வனடியும் பிறவிக்கடலுள் வீழ்த்துமெனக்கொண்டு நாயனார்க்குங் குற்
றங் கூறத்துணிவரோ? பொன் போலும்பூவெனின் அதனைச் செம்
மைக்கு மாத்திரம் கொள்ளாமல் பொன்னைப்போற் பொற்கொல்லாற்
சுட்டுத்தட்டி நீட்டப்படாமையிற் குற்றமென்பார் கூற்றுக்கும் இவர்
கூற்றுக்கும் வேறுபாடுண்டேல் விளம்புமாறு வேண்டுகின்றேன். விளை
யாட்டாக வாழ்த்தினுங்கடவுளருளுமென்று நூலெல்லாமுறையிடவும்,
நண்பர்மாத்திரம் யாதொன்றன் மேலிட்டாரோ இவ்வாழ்த்து அப்பிர
யோசனமாமெனக் கூசாதெழுதினார்? அந்தோ! உரைப்பாருரைப்பவற்
றிற்கு இக்காலத்தில் யார் என்செயவல்லார்? அன்றியும் இவ்வுவமை
யில் பொதுவியல்பின்றாகவும் குறைகூறற்பொருட்டு இவராற் கூறப்பட்
டனவிரண்டு. ஒன்று முதற்கண்விடந்தோன்றலுமற்றொன்று அமுத
முதலாயவற்றைப்பாற்கடலுக்கயலாராகிய தேவரடைதலுமாம். இவற்
றையுடன் படினுங் குற்றமாகாமை கூறுதும். செந்தமிழமிர்தந் திரண்
டெழற்கு முன்னர்ப்பாற்கடல் விடம்போலவே ஆன்மபோதமாகியவிட
ம்வெளிப்பட்டுக் கடவுளாலுண்ணப்படுவது நன்மையேயாதலானும், புந்

தியாகிய ... செந்தமிழமிர்தத்தை அப்புர்திக்கு அய
லாகிய ... ட்டமே யடையவேண்டுமாதலானும்
அவர் க... காமை யறிந் தடங்கக்கடவர்.

இ... பது உழுகொழுவாமென்கின்றார். அதனையு
மாராய்வோ... ழுவென்பது தொளையின்மையானும் நூல் நோக்
கப்படுவத... லானும் தான்றைத்தலைசெய்யாவிடினும் தைப்பதாய
துன்னூசிநுழைதற்குவழியாக்குவதொருகோலாம். அதுசென்றவழி
தான் துன்னூசிசெல்லல்வேண்டும்; அதுசெல்லுதற்குமுன் துன்னூசி
செல்லக்கூடாது. அதுபோலவே பாயிரங்கேட்டாரே நூல்கேட்டல்
வேண்டும். முன்கேட்டல் கூடாது. இதுவே உவமத்தின்கருத்து. இக்
கருத்தை, கொழு துன்னூசி நுழைதற்கு வழியாக்கலுடைத்தென
பாயிரம் நூல் நுழைதற்கு வழியாக்கலுடைத்தெனவும், கொழுவு
ற்கோல் கொழுவெனப்பட்டதெனவும் யாமெழுதியவுரைகொண்டு
தெளிக. அன்றியும் செம்மார்தோற்கருவிசெய்யுங்காலை மீண்டுக் கூறி
யதுபோலவே முற்செலுத்தப்படுவதாகிய கோல்போன்ற கொழுவால்
வழியாக்கி, அவ்வழியே துன்னூசிகொண்டு தைத்தலைநேரிற்கண்டாயினு
ம் ஐயமுமழுக்காறும் போக்குக. முற்செலுத்தப்படுவதாகிய அக்கருவி
கோல்போறலிற் கோலென்றும் கொழுவலிற் கொழுவென்றும் பெயர்
பெறலைக் 'கோல்கொழுவென்ப' என்னும் பிங்கலந்தையானுணர்க. இவ்
வாறன்றி இவர்கூறுமாறு உழுகொழுப்பாயிரத்திற்கும் ஊசியே நூலுக்கும்
உவமமெனின் கொழுச்சென்றவழிச்செல்லுமாறுபோலவெனவிளையுவம
மாகநிற்றலால் உழுகொழுச்சென்றவழியேதான் ஊசியுஞ்சென்று தைத்
தல்வேண்டுமென்றும் உழுகொழுச்செல்லுமுன் ஊசிசெல்லல்கூடா
தென்றும் பொருள்பயத்தல்காண்க. அங்ஙனம் உழவுகொழுச்செலுத்
தியபின் அத்துவாரத்தின்வழி ஊசிசெலுத்தித்தைத்தல் அசம்பவமாம்.
அன்றியுங் கொழுச்சென்ற வழியென்பது உழுபடைச்சாலெனலுங்கூடு
மாகலின் அவ்வழியிற்கலப்பைசெல்லுமேயன்றி, அதன்கண்ணும் ஊசி
செல்லல்யாண்டுமில்லை ? அற்றன்று ; உழுகொழுச்சென்ற துவாரத்
தில் ஊசிசெல்லின் இலகுவாதல்போலுமென்பதே உவமக்கருத்தெனின்,
அஃதாசிரியர்கருத்தாயின், யானைசென்றவழி மசகஞ்சென்றாற்போல
வென்றாங்கு யாதானுமோர் நிகழ்ச்சியேகூறுவார். அங்ஙனமன்றிக்கொ
ழுச்சென்றவழியாகிய படைச்சாலில் ஊசிசெல்லலும் உழுகொழுவைத்
தணி முதலாய ஒன்றிற்செலுத்தி அத்துவாரத்தின் வழியே ஊசி
யைச்செலுத்திச் சோதிப்பாரும் இன்மையின் நிகழாத செயலை
யுவமமாக்கார். அன்றியும் உழுகொழுச்சென்ற வழியில் துன்னு
மூசியுந் துன்னாத ஊசியுமொப்ப நுழைதல் கூடுமாகலின் ஊசியெனப்
பொதுவகையாற் கூறாது துன்னூசியென வினம் விலக்கிக் கூற
லுங் குற்றமாம். அற்றன்று ; செஞ்ஞாயி றென்றாற்போல ஊசி
யினை விளக்கற்பொருட்டுத் துன்னூசியென்றா ரெனின் 'இனச்சு
ட்டில்லாப் பண்புகொள் பெயர்க் கொடைவழக்கா றல்ல' வென்று
ஆசிரியர் தொல்காப்பியனார் விதித்தாராகலின் அதுவும் பொருந்
தாது. துன்னம் துன் என்பன தைத்தலுக்கும் ஊசித்தொளைக்
கும் பெயரெனலும் நச்சொல்லடியாகத் தையற்காரருக்கும் செம்
மார்க்கும் துன்னா, துன்னகாரரெனப் பெயர்வழக்கலும் பிங்கலந்தை
முதலாய வற்றானறியப்படலின், அவ்வுடைதைத்தலுந் தொளையுமில்லாத
காதற்ற ஊசி முதலாயவற்றையினம் விலக்கித் தையலூசியைச் சுட்டலு

முணர்க. இங்ஙனம் இனம் விலக்கலாய் தன்றுதை கொழுவு கோல் சென்றவழியே கொழுவாத துன்னூசி யினிது சென்றாற்போல வெனப் பொருள் பயத்தலின் யான்கூறும் உவமம் வலியுறுதலும், வினையுவம மெல்லாம் புலிபோலப் பாய்ந்தானென்றாங்கு யாண்டாயினும் நிகழ் செயலாதலே வேண்டுமாகலானும், உழுகொழுச் சென்றவழி யூசிசெல் லல் யாண்டு மின்மையானும் அவர் கூறிய வுவமம் வழுப்படலுங் காண்க. வினையுவம மன்று; பெருமையும் நன்மையுங் கருதியங்ஙனங் கூறினரெனின் கொழுப்போன்ற வாயிரங் கேட்டார்க்கு ஊசி போன்ற நூலினிது செல்லுமென்று பண்புவமையாக்கல் வேண்டுமன் றிக் கொழுச்சென்ற வழியினிது சென்றாற்போலவென வினையுவமஞ்செ ய்தல் கூடாது. இதனைப் பன்முறை சிந்திக்கக் கடவர். இங்ஙனம் உழுகொழுவுந் தையலூசியுமெனக் கொள்ளின் அசம்பவமா யுவமம் வழு வாதலைக் கருதியே திரிசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுந் தியாகராசலீலையில், "இசைபடு பருப்பொருட்டா மிலக்கியஞ் சென்றவாறே, வசைதவிர் நன்பொருட்டா மிலக்கணம் வயங்கிச்செல்லும், நசைபடு மொருவன் மாட்டு நறும்புனல் வயலின் மாட்டும், அசைவில் திண்கொழுச செல்லாறே துன்னூசி யழகிற்செல் லும்," என்னுஞ் செய்யுளில் உழுகொழுச் சென்ற வழிச்செல்வது கலப்பையே யாதலின் இவர்போல துன்னூசியைத் தையலூசியெனக் கொள்ளாமல் உழுகொழுவொடு சம்பவமுடைய கலப்பையைக் கொண் டார்கள். இதற்கு மகா மகோபாத்தியாயர் ஸ்ரீமத் சாமிநாதையரவர் களும் துன்னூசி கலப்பையின் உறுப்பென்று குறிப்புரையு மெழுதி னார்கள்.

இங்ஙனம் துன்னூசியைத் தையலூசியெனக்கொள்ளாது உழுகொ ழுவுக்கியையக் கலப்பையென்றாற்போலவே யானும், துன்னூசி கலப் பையினுறுப்பெனற்குப் பிரமாணங் காணாமையின் அதனைப் பதப் பொருட்படி தையலூசியெனவே கொண்டு அதற்கியைய உழுகொழு வைக் கொள்ளாது கொழுவுகோலாகிய கூரிரும்பைக் கொண்டேன். இவ்விருவகையுள் ஒன்று கூடுமன்றி இயைபில்லாத உழுகொழுவும் தையலூசியும் எவ்வாற்றானும் உவமையாகாமை தெளிக.

இதுவரை திருவாவடுதுறை முதலாய ஆதீனங்களிலும் வித்துவக் கூட்டங்களிலும் உழுகொழுவுங் கலப்பையுமெனப் பொருள்கூறலே யன்றி இவர் கூறுமாறு உழுகொழுவொடு தையலூசி கூறுமையுங் கேட் டுணர்க.

அங்ஙனமாயின், துன்னூசிக்குக் கலப்பையெனப் பொருள் கூறாது தையலூசியெனக் கூறியதென்னையெனின் அதற்கு விடை விவேகபாநு வில் மகா-ள-ள-ஸ்ரீ கந்தசாமிக் கவிராயரவர்களால் எழுதப்பட்டமை யின் ஆண்டுக் கண்டுகொள்க. துன்னூசியென்னுந் தொடரில் ஊசி விசேடியமாதலின் அதனை விடுத்து விசேடணமாகிய துன் னென்னுஞ் சொல்லையே விளக்கித் தைத்தற் றொழில்செய்யு நூல் கோத்த தொளையையுடைய ஊசியின்காதெனப் பொருளெழுதியிருப்ப, அதனை நோக்காது, ஊசிக்கே ஊசியின் காதென்று பொருளெழுதின தாகச் சொல்லி மடியாக்காய் போட்டுக் குற்றங்கூறினார். துன்னென் பது தைத்தலுக்கும் ஊசித்தொளைக்கும் பெயராதலானும், ஊசியெனின் தைத்தலையுந் தொளையினையு முணர்த்தாமையானுந், தைத்தற்றொழில் செய்யுநூல் கோத்த தொளையினையுடைய ஊசியின் காதென்ற வுரை

தன்னென்னும் விசேடணத்திற் கெழுதிய பொருளேயன்றி விசேடியமாகிய ஊசிக்கெழுதிய பொருளன்றெனத் தெளிவாராக. அற்றேல் தன்னூசியெனக் காட்டியெழுத வேண்டாவெனின் இங்ஙனமே நச்சினார்க்கினியார் முதலாய வுரையாசிரியர்கள் பதப்பொருள் கூறாது பிண்டப்பொருள் விளக்குமிடமெல்லாம் விசேடண விசேடியமாக வருவனவற்றை முற்று மெடுத்துக்காட்டி அவற்றுள் அருஞ்சொற்கே பொருளெழுதிச் செல்லும் வழக்கினைக் கண்டமைக. கொழுவுந்தன்னூசியும் வேறு வேறு கருவியென்பது செம்மார்பால் இன்றும் பிரசித்தமாயிருத்தலாலும், யான் உவமையை விளக்குமிடத்துக் கொழுத்தன்னூசி நுழைதற்கு வழியாக்க லுடைத்துப் பாயிரம் நூல் நுழைதற்கு வழியாக்கலுடைத்தென் றமையானே அஃது அவ்வூசி செல்லற்குமுன் செல்வதாகிய பிறிதொரு கருவியென விளங்கலானும், அவை இருவேறு கருவியெனல் வெள்ளிடை மலையாகவும் அதனை விடுத்துத் தொளையுடைய ஊசியை இனம் விலக்கிச் சுட்டற்பொருட்டு ஊசித்தொளையின்றி மேலுள்ள தோல்போன்ற தோலென்றெழுதப்பட்ட வாசகமே அச்சுப் பிழையால் ஊசித்தொளையின் மேலுள்ள வென்று நிற்றல்கண்டு அவையிரண்டு மொன்றெனக்கொண்டு சில கூறினார். என் கருத்தன்மையின் அதுபற்றி அவர் கூறற்கு விடையின்மை காண்க. இவ்வாறு பாயிர விருத்தி - 186-வது பக்கத்திலும் - 6-வது வரியில் கவியென்பது பிருகுவை யுணர்த்துமென்ற வாசகம் கவியென்பது பிரமனையுணர்த்துமென நின்றது. இத்தொடக்கத்தன இரண்டாவது பிழைதிருத்தத்துட் சேர்க்கப்பட்டன. இதுபோல்வனவற்றைப் பின்முனுள்ள வாசகங்களா லுண்மைகண்டு பொருள்கோடல் கற்றோர்க்கியல்பன்றிக் குற்றங் கூறல் கடனன்று.

இனிக்கொழு வென்பது தன்னூசிக்கு முன் செலுத்தப்படுங் கோலையன்றி உழுகொழு முதலாய பிறவுணர்த்தாதென்று நான் சொல்லவில்லை. அது பலபொருளுணர்த்தினும் தன்னூசிக் கியைபுடைமையால் ஈண்டுணர்த்தல் கோலென்பதே என் கருத்து. அங்ஙனமாகப் பிறவுணர்த்தற்குச் சிலமேற்கோள் கூறினார். இஃதெற்றுக்கு? அன்றியும் கொழு ஆயுதமென்பதற்குத் திருவிளையாடற்புராணம் திருநகரப் படலம் 72-வது செய்யுளைச்சான்று கூறினார். அச்செய்யுள்,

"மழுக்கள் வச்சிரங் கார்முகம் வாளிமுக் குடுமிக்
கழுக்கள் சக்கர முடம்பிடி கப்பணை நாஞ்சில்
எழுக்கள் நாந்தகம் பலகைதண் டிலைமுதற் படையின்
குழுக்க ளோடிகல் விந்தைவாழ் கூடமும் பலவால்",

என்பதன்றோ? இதன்கட் கொழுவுண்டென்பது என்னவிந்தை? படையின் குழுவெனப் பிறர்படிக்கக் கேட்டபொழுது இவரது திருச்செவியில் படையின் கொழுவென்றாற்போலச் சத்தங்கேட்டலுங் கூடுமாதலின் அதுவும் குற்றமாகாது. இங்ஙனங் குழுவுக்குங் கொழுவுக்கும் வேறுபாடறியாத இவர்தாமோ தொல்காப்பியப் பரிசோதனை செய்தற்குரியார்? அந்தோ! "ஒப்பிலா மலடிபெற்ற வொருமகன் முயற் கொம்பேறித், தப்பிலா காயப்பூவைப் பறித்தமை சாற்றினரே." இனியேனும் பிறர் பழிதூற்றலின்றிச் செம்மைபேணக் கடவர்.

சோழவந்தானூர், அரசஞ்சண்முகன்.

விசுவ. (புன்னகை செய்து)
புனைந்தனை மாலை, புகழ்ந்தனை பெரிதா ;
அனைத்தனி லறிவு மருங்கவித் திறனும்
பெற்ற பெற்றியாற் பேசினை ; யென்பா
லுற்றதோ வென்னில், ஒருசிறி தில்லேன் !
மதுரமே பெருக மனத்தினைக் கவர
இதமுற வந்திங் கின்னிசை பாடினை ;
கேட்டனன், நானுங் கேட்பக்
கூட்டுற வாகக் கூடி வாழ்கவே!

(சேவகர் வெளியேற்ப மற்றவர்பாசறைபுக)

களம்—3 முற்றும்.

அங்கம்—4. களம்—4.

அரியநாதன்கூறிய பலநன்மொழிகளையும்ஏற்றுக்கொள்ளாத நாகமன் வீரங்குன்றவும், விசுவநாதன் சந்திரசேகரபாண்டியனைச் சிறைமீட்டு அவனைச் சிம்மாசனமேற்றி அரியநாதனை மந்திரியாகவமைத்துத் தனது தந்தைதாயுடன் விஜயநகர்நோக்கிச் சென்றனன்.

அங்கம்—4. களம்—4.

இடம்—பாண்டியன் கொலுமண்டபம். காலம்—காலை.

(விசுவநாதன், அரியநாதன், நாகமன், சந்திரசேகரபாண்டியன், குணவீரவர்மன், ஜீவராய், சொக்கலிங்கன் முதலானவர்கள் தம்தம் ஆசனத்தில் முறையே வீற்றிருப்ப.)

(நேரிசையாசிரியப்பா.)

விசுவ. (எழுந்து நாகமனைப்பணிந்து)
எந்தையே ! பிந்தனை பேதிலார் போலுன்
சிந்தை புண்படச் செய்தன பொறுப்பாய் ;
அரச ருணையு மறநெறித் துணிபும்
விரதமாக் கொண்டேன் ; வினைப்பயன் கொடிது !
சிறப்புற விருத்திச் சேவடி பணிந்து
பிறப்பித் தவனைப் பெரிதுறப் பேணுஞ்
செய்தவ மிழந்தேன் ! சிந்தையு நொந்தேன் ;
கொய்யுளைப் பரியினங் கொணர்ந்தநா னொருவன்
கூறிய மெய்க்கதை கூடிய தென்பால் !
எறலை தவழு மிருங்கடற் றுறைசேர்
நகரமொன் றதனில் நாய்கரி லொருவன்,

பகர்விலை தனக்குப் பண்டம் விற்பவன்;
அன்னவன் றனயன் அருங்கலை பயின்றோன்
மன்னவன் சுல்தான் மனத்தினில் மகிழ்ந்து
தன்னகர் நீதியர் தலைவர்க் குதவி
இன்னவ னெனவிசைந்தவன், ஒருநாள்
பட்டினம் புகுந்து பற்பல வணிகர்
கட்டளைக் கல்லையுங் கைத்துலைக் கோலையும்
முத்திரைப் படியையு முழக்கோல் தன்னையும்
உய்த்தறிந் தேகினன்; ஒருசா ரமர்ந்த
தந்தையை நோக்கித் 'தனயனே யாமெனக்
சிந்தை செய்திடேல் செய்திற முணர்வான்
ஆதலின் முகத்த லளத்தற் கருவிகள்
ஏத முறுதன வேற்றிடு வா' யெனப்
பக்கத் துள்ளார் பகர்தரு காலையில்,
நக்கனன் வணிகன்; நணுகினன் புதல்வன்,
வாம்பரி யிழிந்து வந்தவன் கடையி
லாம்பல கருவிக ளாய்ந்தனன்; பிழையெனக்
கண்டனன், சிந்தை கலங்கி யவற்குத்
தண்டனை விதித்தனன்; 'தரும தேவதை
தந்தைதா னெனவுந் தன்கிளை யெனவுஞ்
சிந்தை செய்யுமோ? சிறிதுந் தன்னிலை
தவறுமோ? தந்தை! தாளிணை பணிந்தேன்;
எவரை யாகினு மிப்பணிக் கிறைவன்
ஏவிலன், இத்துய ரிட்டன னென்வழி!
ஆ! விதி தன்னை ஐய பொறுத்தருள்;'
என்று தொழுதனன்;—எனது நிலைமையும்
இன்றது சான்றதால்! என்பிழை பொறுப்பாய்.

நாக. மைந்த! நீ வருந்தல்; வாய்மை காத்தனை;
உந்தையைக் காய்ந்ததா லொருவரு மேசார்;
ஆண்டு முதிர்ந்து மாசைப் பெருக்கால்
ஈண்டிறை யாணையை யிகந்தனன்; நீயோ
தாங்கினை; தவறுந் தாய்மொழி தாங்கிலை;
பாங்குறு மரிய ஈதன் பகர்ந்த
நன்மொழி கொண்டிலன்; நாத நின்செயல்
நன்கெனக் கொள்ளு நானிலம்!

ஜீவ. நாகம!
பிழைசெய லியற்கை! பின்னது நினைந்து
குழைவுறு வாரேற் குற்றந் தவிர்ந்தார்
மாந்த ரென்றே மாநிலங் கூறும்!
ஏந்தலுங் காட்ட லியற்றிய வினைதான்
தீதெனக் கண்டனை, தெரிந்த தன்மையால்
கோது மகன்றது; கொற்றவன் பொறுப்பான்!
ஆதலி னின்னக ரரசா மிவரை
யாதன மேற்றி யமைவன செய்து
பெருமையோ டெழுந்து பெருநகர்க் கேக
லொருமையா யுன்னுதும்.

நாக. (பாண்டியனை நோக்கி) ஒளிமணிப் பூணினாய்!
சிறியேன் செய்த சிறுபிழை யாவையும்
பெரியோய் பொறுத்தி!

சந்திர. பெறலரும் புதல்வனைப்
பெற்ற பெற்றியோய்! பிழைநீ செய்திலை.
உற்றதை விலக்க வொருவரா லாகுமோ?
என்விதி யென்றே யெண்ணுத லொழித்து
நின்வயி னேற்ற நியாய முளதோ?

விசுவ. (அரியநாதனை நோக்கி)
அருமைத் தோழ! அகன்பொழில் சூழ்ந்த
விரிசடைப் பெருமான் விளங்குங் கூடல்
நகரணி செய்து, நல்லதோர் நாளில்
தகைமைசா லரசைத் தமனியப் பீடந்
தன்னி லமர்த்தித், தரணி மன்னவர்
மன்னவன் மகிழ மணிமுடி கவிப்பான்
கருதினன், கருதிய காரியங் கைவாத்
தருதி, மன்னவற்குத் தக்கதோர் துணையா
யமைந்திவ ணிருத்தி, யணிநகர் நோக்கித்
தமருட னேகுவன் தாழ்த்திடல்.

அரிய. நன்று!
அன்னதே செய்கை! யாற்றுவன்
மன்னவர் மன்னனை மாநிலந் தொழவே!

அங்கம்—4. களம் 4 முற்றும்.

அங்கம்—4. களம்—5.

விஜயநகரத்தில் காஞ்சனையம்மன் தனது தோழியர்களோடு கவலையற்று விளையாடுபவள் சிற்சில சமயங்களில் தனது காதலனை நினைந்து பெருமூச்செறிவாள். ஒருநாள் தன் தோழியோடு கழலாடிக்கொண்டிருக்கும் பொழுது விசுவநாதன் பெயரைத்தன் தோழி சொல்லக்கேட்டு, காஞ்சனை மிகுந்த வருத்தமடைந்து சோர்ந்தாள். அப்போது மூர்த்தியம்மனோடு அங்கேவந்த கிருஷ்ணதேவன் காஞ்சனையின் காதலைக் கண்டு அவளை விசுவநாதனுக்கே மணம்புரிவிப்பதென்று நிர்மானித்துக் கொண்டான்.

அங்கம்—4. களம்—5.

இடம்—விஜயநகரம், கன்னிமாடம். காலம்—எற்பாடு.
(காஞ்சனையும், மதிவிலாசனியும் கழல்விளையாடிப்பாட.)

காஞ்ச. (ஆசிரியத்தாழிசை)

உலகுறு முயிர்கண்மே லொறுத்திடு மவுணர்க
ணிலையுறு ரரன்முன்னென் றாடாய் கழல்
நிலையுறிற் றஞ்சுவரென் றாடாய் கழல். (1)

மதிவி.

துஞ்சினு லென்னையவர் தொல்குலக் கிளைக
ளெஞ்சலி லெழுந்திடுமென் றாடாய் கழல்
இத்தகைய ரேதிலரென் றாடாய் கழல். (2)

காஞ்ச.

தன்பகை யவர்பொருது சாடினுங் கருத்துறு
மன்பர்க் கெளியவனென் றாடாய் கழல்
அண்டங் கடந்தானென் றாடாய் கழல். (3)

மதிவி.

நண்ணார்க் கிடர்புரிந்தா னாகினுந் தனையெவர்
நண்ணினு மருள்பவனென் றாடாய் கழல்
நாடுகள் புரப்பானென் றாடாய் கழல். (4)

காஞ்ச.

முண்டகக் கண்டிறந்து முப்புர மழற்படப்
பண்டுநின் றாடினனென் றாடாய் கழல்
பாரினை தனக்கிதனென் றாடாய் கழல். (5)

மதிவி.

பற்றல ரிரிந்துபாத பங்கயம் பணிந்திட
வெற்றிபூண் டிட்டானென் றாடாய் கழல்
விச்சுவ நாதனென்றே யாடாய் கழல். (6)

(நேரிசையாசிரியப்பா.)

காஞ்ச. (பெருமூச்செறிந்து)
ஏதடி! மானே! எவர்பெய ருரைத்தனை!
போதடி புனைந்தும் போதினை வருளிலன்!
புங்கவன் மனத்திற் புக்கிருந் தவனும்
எங்காம் பற்றிலன், ஏழையேன் விதிவசம்
எப்படி யிருக்குமோ? எந்திழை யறியேன்.
(தனது மலர்க்கரத்தால் மதிமுகத்தை மறைத்துத் தேம்பியழ.)

மதிவி. செப்படி! யெவர்பெயர் செப்பினன் பேதை!
கைவளை கழன்றது! கருங்குழல் சரிந்தது!
மெய்வியர்ப் புற்றது! மின்னிடை மெலிந்தது!
மேனி பசந்தது! மெல்லலே யுன்னிறை
மானமுங் கவர்ந்து மனத்தினிற் கரந்த
கள்வனை யுரையாய்?
(மூர்த்தியம்மனும், கிருஷ்ணதேவனும் உள்ளே பிரவேசித்
தொதுங்கிநின்றுரையாட.)

மூர்த்தி. கன்னிதன் னுளத்தி
னுள்ளுறை காதல னொருவனைச் சொல்லெனக்
கேட்டனர், வருக! கிஞ்சுகச் செவ்வாய்
வாட்டடங் கண்ணி வார்த்தையா லறிதிர்!

கிருஷ். இவண்மனக் கிருப்பேன்; ஏழைநீ முன்னரே
இவள்கருத் திசைத்திலை!

மதிவி. (காஞ்சனையைநோக்கி) எழுதரு மேனியாய்!
வஞ்சித் திருவனை மறைத்து வைத்தனை!

காஞ்ச. (நெடிதுயிர்த்து)
வஞ்சியே! நெஞ்சறை வள்ளலை யுணர்கிலை!
மன்மத னழகில்! மதியினிற் சிறந்தோன்!
என்மனத் தெழுந்த வெழிலார் கற்பகம்!
எளியவர்க் கிரங்கி யின்னருள் புரிவோன்!
களிறெனத் தகையன்! கல்வியிற் பெரியன்!
ஆற்றலின் முருகன்! ஆடவர் திலகன்!
மாற்றமென் னுரைக்கேன்? மதிவிலா சனி! நீ
எவையெவை கூறினு மென்மனத் தெழுந்தார்க்
கவையவை பொருந்தும், அணிவனைக் கோழி!

நாதனுர் பெயரை நங்கையர் நவில்வரோ ?
ஆதலி னவரே யார்வலன் ! (வெள்கித்தலைகுனிய)

மதிவி. விசுவ

நாதனுர் பெருமையை நவில வொண்ணுமோ ?
காதல னவனே ! கலந்து வாழ்க !

காஞ்ச. (மிகுந்த ஆர்வங்காட்டித் தோழியைக்கடைக்கணித்து)

அவரையே மணக்கு மரும்பெரும் பாக்கியந்
தவறு தெய்துமோ ? தையலே ! மலர்மகள்
இன்னரு ளெய்துமோ ? எனக்கு
மன்னவ னன்றி மணமக னெவனே ?

(சோர்ந்து தரையிற்சாய)

மூர்த்தி. (விருத்தம்)

வெங்காமத் தழல்படிந்து வேகின்ற பசுங்கொடியே
விழைவே யெங்கள்
மங்காத செல்வத்துக் குறைவிடமே மாதரசே
மணியே பொன்னே
இங்காரும் புகழ்ந்தேத்து மேர்தலையே மணந்துகல
மெய்தி நானுந்
சிங்காரம் படைத்துலகிற் றிருமாலுந் திருவுமெனச்
சேர்ந்து வாழி.

(என்றுகூறித் தன்தோழியைத் தரையினின்றெடுத்துத் தழுவினள்.)

மதிவி. (நேரிசையாசிரியப்பா.)

மூர்த்தி ! யேதடி ! மொய்குழல் சோர்ந்தாள்,
வேர்த்த முகத்தாள், வேதனை யொழிந்து
காய்கன லடங்கக் கன்னியை
ஆய்மலர் தூவிய வமளிசேர்த் துவமே !

(மூர்த்தியும், மதிவிலாசனியும் காஞ்சனையை யெடுத்துச்செல்ல.)
(நேரிசையாசிரியப்பா.)

கிருஷ். (தனியே)

அறியா திருந்தே னழகியின் காதல் !
வெறியார் மாலையன் விசுவ நாதனை
விரும்பினள் ; விரும்பிய விருப்பின் படியே
பெருமண முடிப்பன் ; பெருந்தகை சாலவும்

எற்ற முடையோன், எழிலோன் ;
ஆற்றலு முடையோன் ; ஆரவ னிசுமே ?

(வெளியே செல்ல)

அங்கம்—4. களம்—5. முற்றும்.

அங்கம்—4. களம்—6.

விசுவநாதன் கிருஷ்ணதேவன் சபையில் தந்தையை நிறுத்திச் சந்திரசேகரனைச் சிம்மாசனம் ஏற்றிய நற்செய்தியைக்கூற, நாகமன்தான் செய்தபிழையை ஒப்புக்கொண்டவனாய் மன்னிப்புக்கேட்டான். கிருஷ்ணதேவன் அவ்வாறேமன்னித்து நாகமனைத்தழுவிச் சம்பந்தியென்று உறவாடித் தன்மகள் காஞ்சனையை மருமகளாக அங்கீகரிக்கும்படி வேண்டினன்.

அங்கம்—4. களம்—6.

இடம்—விஜயநகரம். இராஜசபை. காலம்—காலை.

(கிருஷ்ணதேவன், சாலுவதிம்மன், அச்சுதன், இராமன், குருபக்க, சபையோர்கள் முறையே தம்தம் ஆசனத்தில் வீற்றிருப்ப,)

(நேரிசையாசிரியப்பா.)

கிருஷ். அவையீர் ! கேண்மின் ! ஆணைமேற்கொண்டு,
சுவைமதுத் துளிக்குஞ் சோலையிற் றும்பி
தமிழினைப் பாடுந் தமிழகஞ் சார்ந்து,
தமையுட னிருந்த காவலற் கரசைத்
தந்து, தன் றந்தையைத் தன்னுடன் கொண்டு
வந்தனன் வாகை மாலை மார்பன் ;
நாத னிங்ஙன் நாகம னேடும்
போதரும். அவர்கள் போதரு காலையில்,
கம னிழைத்த நவையினைக் கருதா
கையி னெழுந்துநல் லுரைகளைப் பகர்மின்.
னவ னிடத்தி லன்பொடு சென்று!

(விசுவநாதன், நாகமன். ஜீவராய் உள்ளேவர)

இன்னே வந்தனர்——எழிலார் தடக்கை
நாத! வருக! நாகம! வருக!
ஏதங் களைந்த வீராயநீ வருக!

(மூவரும் கிருஷ்ணதேவனை வணங்கிநிற்ப)

என்னுரை யிகவா தெழுந்துமேற் சென்று
தென்னவ னுரிமை திருத்திய தீர!
அழகினின் மதன! அறிவினிற் சேட!
இழைத்திடுங் கைம்மா றென்னுள தம்ம?
இவனைநன் மகனு யேற்றிடச் செய்த
தவமே பெரிது! தாணையின் றலைவ!
இவனுறு மாதனத் தினிதி னமர்க!

நாக. பவத்தொழில் புரிந்தேன்; பார்த்திவ னுணையைக்
கடந்தன [illegible]; காவல ரவையி
[illegible] பெறத் [illegible] லேற்குமோ?

கிருஷ். நாகம!
[illegible] சென்றது கருதேல்!

நாக. [illegible] செய்தது பொறுத்தி!
இன்றடி பணிந்தேன் [illegible] ளியேன் மனமிக
நொந்தனன், ஐய! [illegible] லைத் துடைத்தி.

கிருஷ். [illegible] வலை சிறிதுங் கொள்ளேல்;
பன்னெடுங் காலம் பழகினன்; பகையை
உன்னுடை வலியா லொழித்தனன்; உயர்ந்தேன்;
அத்துணை நன்மையை யறியா திருப்பனே?
இத்துணை யெளிமை யிசைத்தனை வீர!
இன் [illegible] ருள் வேண்டினை; யென்னுற வளித்தனன்.

குருபக்க. இன்னருள் புரித லிறைமகற் கியற்கை
என்ட [illegible] ற் கேற்ப வின்னுரை கூறினை;
நின்னருள் வாழி! நேயனும் வாழி!

...ாளர் தலைவியினை நடித்த சச்சிதாநந்த சுவாமிகள் சித்தி
...யினிடத்தே யிருந்த வன்புடையராதலால், பாஸ்கரனைக்
...இவதுபோல் நடித்து அரசனை வஞ்சித்துப் பாஸ்கரனுக்கு
...வார்பள்ளியைக் காட்டி அவனுக்கு ஈஸ்வரானுபோகம்
...க்கும்படி செய்வித்தனர். நரேந்திரபுரத்தில் அரசன்
செய்வித்த கொடுமையைச் சித்திராங்கிக் கறிவிக்க அவ
...சாவென்பது மற்றோர் தேகப்பிராப்தியே யென்று கருதி
...மனையமனிதனை வெறுத்துத் தனது சரீர மின்சாரசக்தியா
...தூலாக்கினியை வரவழைத்து அதிற் புகுந்து சதியாயி
இந்நூலை வியக்குங்கால் யாம் எதைக்கூறுதலோ? ஒருவன்
...ஸ்தூல சரீரத்தைவிட்டு ஸூக்ஷ்ம தேகங்களில் அங்கு
...ஞ்சஞ்சரிக்கும் வன்மையுடையானென்று கிர்சபேசனுக்கு
...க்கும் சுவாமிகளை வியக்கவா? சுவாமிக ளருளைப்பெற்று
...ங்கி பாஸ்கரனை ஈடேறச்செய்து அவன் தேகத்தில் சக்
...கட்டி அவனைச் சுவர்க்கலோகத்திற்கு அழைத்துச்
...விநோதங்களைக் காட்டினதை வியக்கவா? இப்புத்த
...வொருபக்கமும் இனிமை பயக்கின்றது! நரேந்திரன்
... பெற்று அரசைவெறுத்து அறப்பள்ளியைச்சார,
...ன் பட்டமடைந்து மோகனாங்கியை மணந்து நீதி
... செங்கோல் நடாத்தி நீர்ப்பட்ட ...மறையிலே
...க தபசியா...ன். இந்நூலைப் படிப்பவரும்
...பத்திராசிரியர்.

...க விளம்...

...கரும் புத்...ங்கள் தஞ்சைத் தமிழ்ச்
...ப்படும். வேண்டியவர்கள் ஷெ சங்கக்
...தரிசகரு ...ழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

		ரூ. அ. ப.
1.	கத்தியசிந்தாமணி, ஸமஸ்கிருதவசன காவியம் (வாதீப சிம்மசூரியினால் செய்யப்பட்டது)	2—0—0
2.	க்ஷத்திரசூடாமணி, (ஸமஸ்கிருதகாவியம்) காவிகோகட்டிடம்.	0–15—0
	ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மகாகவி.)	1—0—0
	தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம், (தமிழ்)	0—2—6
	ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1.	0—6—0
	...வாமிநாதவிஜயம்.	0—1—0
	...ால்காப்பியப்பாயிர விருத்தி.	2—0—0
	...லமாற்று மாலை.	0—4—0
	...க்ஷேத்திர யாத்திராநுகூலம்	0—4—0

...சை தமிழ்ச்சங்கம், }
7—10—05. }

உ. அப்பாசாமி ஐயர்,
உதவிக் காரியதரிசி.

பரஸ்பர சகாய கல்யாண

சபை.

(ஹெட் ஆபீஸ், மானோஜியப்பாவீதி, தஞ்சாவூர்.)

இந்தசபையில் சேரும் மெம்பர்கள் தங்கள் குழந்தை களுக்குக்கல்யாணம் செய்யுங்காலத்தில் திரவிய சகாயம் செ டுக்கப்படுவார்கள்.

இச்சபையினாலுண்டாகும் லாபத்தை மெம்பர்கள் சொல்ப காலத்திற்குள் பார்க்கலாம். குழந்தைகளுள்ளவர்கள் உயிரோ டிருக்கையிலேயே தாங்கள் செய்யவேண்டிய கடமையை நிறை வேற்றுவதில் ஏற்படும் பணச்செலவிற்கு இச்சபையார் ப உதவி செய்ய முயலுவதை ஜனங்கள் அறியவேண்டும். இ மரண பண்டுகளில் போல சேரும் மெம்பர்கள் ஜீவநாள் முழு தும் சந்தா செலுத்த வேண்டியதில்லை. குறிப்பிட்ட கல்யாண நடந்த பிறகு அவர்கள் சபையை விட்டுவிடலாம். மா கொஞ்சமாய் செலுத்தியதை ஒரே காலத்தில் சேர்த்துக் கொ டுப்பதுடன் குறைந்தது இரண்டு மடங்கு ஒவ்வொருவ போனஸ் கிடைக்கும்.

மாத சந்தா ரூ. 1 அல்லது ரூ. 2 கொடுத்துவந் ண சமயத்தில் ...ங்கு தொகைக்கு இரண்டுமட... யாது தகுந்த உதவி ...க்கும்.

சென்ற ஜூலை மாதத்தில் ...வாரூரிலிரு... மெம்பருக்கு ரூ. 55 விவாக காலத்தில் ச... கப்பட்டது. அவர் செலுத்திய தொகை ரூ. 10 தான்.

இதில் மூவகை கல்யாணங்களுக்கு மெம்பராகச் சேரலா — உபநயனம், விவாகம், திரகூஷிகல்யாணம்.

சேரும்போது பிரவேசக் கட்டணம் ரூ. இரண்டு.

தகுந்த கனவான்கள் டைரெக்டர்களாயிருந்து சபையை நடத்திவருகிறார்கள்.

விபரமான ரூல்புஸ்தகம் விலை அணா ஒன்று, பை. ஆறு. அ பி வாங்கிப்பார்க்கலாம். சேருபவர்களுக்கு வெகு லாபமுண்

பணம் அனுப்புவோர்கள் தஞ்சாவூர் கல்யாண சு ஹைஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ கே. இராமானுஜ காருக்கு மணியாடர் மூலமாய் அனுப்பவும். அவர் ரசீது வேறு ரசீது செல்லாது.

ஆங்காங்கு கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

பணம் தவிர மற்றைய சகல லெட்டர்களும் பின்வ சத்திற்கு அனுப்பவும்:—

மானேஜர், பரஸ்பர கல்யாணசபை

தஞ்சா